Registered as a Newspaper    பக்கங்கள் 08    விலை: ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    PEOPLES DAILY

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    கார்த்திகை 11    27 - 11 - 94    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 282

## யாழ். மருத்துவபீட மைதானத்தில் மாலை பொதுக்கூட்டம், அணிவகுப்பு

தமிழீழ விடுதலைக்காக தம்முயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாவீரர் நாள்நிகழ்வுகளில் இன்று மாலை அணிவகுப்பும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது. அணிவகுப்பு பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பலாலி வீதிஇலுப்பையடிச் சந்தியில் ஆரம்பித்து பலாலி வீதியால் திருநெல்வேலிச் சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதியால் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடம் நோக்கி திரும்பி கூட்ட மைதானத்தை அடையும். இவ் அணிவகுப்பில் விடுதலைப் புலிகள் படையணி கடற்புலிகள் அணி

(8-ம் பக்கம் பார்க்க)

### தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் செய்தி

# போராட்டத்தின் வளர்ச்சி நிலைக்கு ஏற்றதான சுயாட்சி திட்டத்தைப் பரிசீலிக்கத் தயார்

## சமாதான வழியில் சந்திரிகா அரசு வந்தால் புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு வழங்கும்

(யாழ்ப்பாணம்)

★ தமிழரின் தேசியப் போராட்டத்தினது இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்திற் கொண்டு உருப்படியான சுயாட்சித் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால் நாம் அதனை பரிசிலனை செய்யத் தயாராக இருக்கின்றோம்.

★ நீண்டகாலமாக, இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம், இன்று தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புக்களை நிறுவும் அளவிற்கு போராட்டத்தை உயர்ந்த படிநிலைக்கு எடுத்துச் சென்றிருக்கின்றது. இன்று நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் நிற்கின்றோம்.

★ சமாதான வழியில், தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண சந்திரிகா அரசு முயற்சிகளை எடுக்குமானால் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்த மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இம் மாவீரர் நாள் செய்தியினை முழுமையாக இங்கு தருகிறோம்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் மாவீரர் நாள்.

இன்றைய நாளை நாம் எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக, எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசம் விடுதலைபெறவேண்டும், எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும், என்ற உயரிய இலட்சியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம்செய்த எம்முயிர் போராளிகளை இன்று நாம் எமது இதயக் கோவிலில் பூசிக்கும் புனித நாள்.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே, நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டுநிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம். தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

## தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது. அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங் காலமாக தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும், எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.


விடுதலைக்காக, எமது தேசம் மதிப்பிட முடியாத பெருவிலையைக் கொடுத்திருக்கிறது. விடுதலைக்காக, இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது. விடுதலைக்காக, இந்த பூமி ரணகளமாக மாறியிருக்கிறது. விடுதலைக்காக, எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துக்களில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

## விடுதலை என்ற இலட்சியத்தை வரலாறு எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது

விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்தெடுக்கவில்லை. வரலாறுதான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர, வேறு வழி எதையும் வரலாறு எமக்கு விட்டுவைக்கவில்லை. ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத் தாண்டவம் விடுதலைப் பாதையில் எம்மைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்கமுடியாத நெருக்குவாரங்களின் விளைவாக நாம் ஒரு விதி செய்துகொண்டோம். எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்க தீர்மானித்தோம். விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு நாம் முடிவு செய்துகொண்டோம்.

விடுதலை நோக்கிய எமது இலட்சியப் பயணம் ஆரம்பமாகி, நீண்ட காலம் ஆகிறது. இந்த நீண்ட பயணத்தில் நாம் எத்தனையோ சவால்களையும், சோதனைகளையும் சந்தித்துவிட்டோம். எத்தனையோ சக்திகள் எமக்கு எதிராகக் கிளர்ந்தன. எமது வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளும் எமக்கு விரோதமாக எழுந்தன. எமது பாதைக்கு முன்னே பாரிய முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. எமது பாதையிலிருந்து எம்மைத் திசை திருப்ப எத்தனையோ சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. போகும் வழி எல்லாம் பொறிகள் வைக்கப்பட்டன. சமாதானச் சதி வலையில் நாம் சிக்கிவிட மறுத்தபோது, போர் என்ற பூதம் எம்மீது ஏவப்பட்டது. நாம் உறுதி தளராது நின்றோம். பாதை விலகாது பயணத்தைத் தொடர்ந்தோம்.

(8ஆம் பக்கம் பார்க்க)



## மூத்த தளபதிகள் பொதுச்சுடர் ஏற்றினர்

(யாழ்ப்பாணம்)

இன்று அதிகாலை 12.02 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டம்மான் பொதுச் சுடரை ஏற்றி வைத்தார்.

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தின் பொதுச் சுடரை விடுதலைப் புலிகள் மூத்த தளபதி கருணா மற்றும் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சிறப்புத் தளபதிசெல்வி ஜெனா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களது பெற்றோர்கள் உறவினர்கள்நினைவுச்சுடரை ஏற்றிவைத்தனர்.

### நினைவொலி எழுப்பல், சுடரேற்றலுடன்

## நள்ளிரவில் மாவீரர் நாள் உணர்வுபூர்வ ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசவிடுதலைக்காக தம்மை தற்கொடை செய்து ஈழமண்ணின் இதயத்தில் நிரந்தரமாக நிலைத்துவிட்ட மாவீரர்களின் நினைவாக நினைவொலி ஒலிக்க மௌன அஞ்சலி அனுஷ்டிப்பிற்குப் பின் நினைவுச் சுடர் ஒளிர, நேற்று நள்ளிரவு முதல் தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள், காரியாலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து நள்ளிரவு 12 மணி ஒரு வினாடி நேரத்திற்கு மாவீரர் நினைவாக மணியோசைகள் காற்றில் கலந்து ஒலித்தன.

இம்மணியோசைகள் 12.02 நிமிடம் வரை ஒலித்தன. நள்ளிரவுவரை கண்விழித்துக் காத்திருந்த மக்கள் விடுதலைக்காக வித்தான மாவீரர்களின் நினைவாக ஒலிக்கப்பட்ட மணியோசை காற்றில் கலந்து செவிகளுக்குள் நுழைந்தபோது, புதிய உணர்வலைக்குள் கட்டுண்டு - எழுந்திருந்து மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

அனைத்துப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் நினைவொலிகளைத் தவிர வேறெந்த சப்தமும் கேட்கவில்லை.

வீடுகளில் தங்கியிருந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## சாரிசாரியாக திரண்டு மாவீரருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முழுவதும் ஆண்கள் பெண்கள், சிறுவர், சிறுமிகளென மக்கள் பல்லாயிரக்கணக்கில் சாரிசாரியாக திரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் சென்று அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், வான், லான் மாஸ்ரர் போன்ற பல வாகனங்களில் பொதுமக்கள் சாரிசாரியாகத் திரண்டு வந்து அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது.

தாய்மார் பலர் தமது கைகளில் குழந்தைகளை சுமந்து வந்து அஞ்சலியில் ஈடுபட்டனர். பல மைல் தூரத்திலிருந்து பொதுமக்கள் வருகை தந்ததை அவதானிக்க முடிந்தது.

யாழ். குடா நாடெங்கும் வட்டவை ரீதியாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயங்கள், நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள மாவீரர் உருவப்படங்களுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

இந்த நினைவாலயங்கள் நினைவுப்பந்தல் வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள வீதிகள், கட்டடங்கள், மரங்கள் எங்கும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு எங்கும் வெளிச்சமயமாகவே இருந்தன.

வலிகாமம் "பகுதியில் பல்

(7ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

BMC லொறி என்ஜின் கிறாங், கெட், றிம்கள் புதியனவும், பாவித்த BMC லொறி என்ஜின்கள் இரண்டும் மற்றும் மரம் அரியும் வட்டவாளும், பட்டறையும் விற்பனைக்கு உள்ளன.

''மில்க்வைற்''
(சி-10779)

**11-11-94முதல் வியாழ மாற்ற பலாபலன்கள்**

சத்யாவின் வியாழ மாற்ற பலன்கள்ரூ10/- எங்கும் கிடைக்கும். பாடசாலைப் புத்தகங்கள்,உபகரணங்கள், தாள்கள், விற்பனைக்குண்டு. சுரேகா புத்தக நிலையம், பஸ் நிலையம் யாழ்ப்பாணம் (10201)

**நீமியா உரம்**

அராலியில், கொட்டைக்காடு சிவஐங்கரன் ஸ்ரோர்ஸ் கடையிலும் ''நீமியா உரம்'' விற்பனைக்குள்ளது. நெற்பயிரில் பூச்சிகளின் தாக்கத்தை ஒழிக்கவும், அமோக விளைச்சலுக்கும் '' நீமியா உரம் '' சிறந்த இயற்கை உரம். பாவியுங்கள், பயன்பெறுங்கள்.

''மில்க்வைற்''
(சி-10769)

**நல்லினத் தேசிக் கன்று**

நல்லின தேசிக்கன்றும் தோடங்கன்றும் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10/- மட்டும். TasteLite Industries (pvt) Ltd. 14, Seenier Lane, Jaffna. (சி-10782)

**உடன் விற்பனைக்கு**

நல்லின பிறிமா புறோயிலர்கள் உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் இறைச்சிக்கோழியும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் (துப்புரவும் செய்துதரப்படும்). தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- மேஜர் பிரதாப்செட்டிப் பண்ணை, இராஜவீதி, கோப்பாய். (சி-10792)

**சமூகமாற்றத்திற்கான அரங்கு**

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒருநாடக ஆக்கவியல் ஆய்வு நூல் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம். (10203)

**சித்திர வகுப்புகள்**

வட இலங்கை நுண்கலை மன்ற தேர்வுகளுக்குரிய வகுப்புகள் 28 . 11 . 94 (திங்கள்) மாலை 3 மணிக்கு ஆரம்பம் இல. 6, பென்டிக்கோஸ் வீதி கச்சேரியடி (10209)

**மனிதரும் சமூக வாழ்வும்**

சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு.எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் - வசந்தம் புத்தகநிலையம் (10202)


# ஒரே தலைவனின் தலைமையில் மக்கள் அணிதிரள வேண்டும்

-மு. வே. யோ. வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

கரும்புலி வீரர்களாகவும், மாவீரர்களாகவும், அக்கினி வேள்வி நடாத்தும் வேளை தாம் பிறந்த மண்ணுக்கே அந்த மாவீரர்களின் உயிரும் உடலும் விதையாகிப் போகின்றது. கனவுகளையும், இலட்சியங்களையும் சுமந்து வாழ்ந்த அந்தத் தியாகச் செம்மல்களின் நினைவாக வருடா வருடம் தமிழீழத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடப்படும் இம் மாவீரர் நினைவு நாளில் அனைத்து மக்களும் ஒரே தலைவனின் தலைமையில் அணி திரண்டு நிற்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு யாழ் மாவட்ட கடற்புலிகளின் அரசியற் துறையின் சார்பாக மு. வே. யோ. வாஞ்சிநாதன் வெளியிட்டுள்ள மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் பரந்தது- விரிந்தது. இந்த உலகப்பந்தில் தமிழீழம் சிறியதுதான். ஆனால், இந்தச் சிறிய தமிழீழத்தில் வாழும் தமிழர்கள் தன்மானமும், உறுதியும் நிரம்பியவர்கள். காலங்காலமாக இந்த மண்ணில் தமிழர்களின் சிறப்பான ஆட்சி நடந்து வந்துள்ளது. ஆனால் சில நூற்றாண்டுகளாக அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமித்துள்ளார்கள். அதனால் அந்நியர்களிடம் இந்தமண் சிறைப்பட்டுக் கிடந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்தியர், சிங்களவர் என்று இந்தப் பட்டியல் உள்ளது.

எல்லாளன் முதல் சங்கிலியன் வரை இந்த மண்ணில் தமிழர்களின் சுய கௌரவத்தை நிலைநிறுத்தப் போராடியுள்ளார்கள். பண்டார வன்னியனின் பங்கும் இதில் கணிசமான அளவு உண்டு. கடலும் கடல் சூழ்ந்த பிரதேசமும், காடும் காடு சூழ்ந்த பிரதேசமும் எமது மண்ணுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

குயிலும், மயிலும் இங்கு பாடவும் ஆடவும் தடையில்லை. இதுபோல் ஒவ்வொரு சீவராசிகளும் இந்த மண்ணில் சுதந்திரக் காற்றை சுவாசித்து வாழும்போது இம்மண்ணையே தமது மூச்சாகவும், பாரம்பரிய பிரதேசமாகவும் கொண்டு வாழும் தமிழர்கள் மட்டும் விடுதலைக் கனவுகளைச் சிறை வைத்துவிட்டு வாழமுடியுமா என்ன? தமிழினத்தின் விடுதலைக்காகப் போராட இம்மண்ணில் ஒரு வீரன் பிறக்கவில்லை. அதனால்தான் இத்தனை காலமாக இம்மண்ணில் தமிழன் தலைகுனிந்து வாழ நேரிட்டது. இன்றோ ஒரு அற்புத வீரன் பிறந்து இந்த மண்ணின் தமிழர்களை மட்டுமல்ல உலகத் தமிழினத்தையே வழிநடாத்தக் கூடிய ஆளுமையும், சிறப்பும் கொண்டவனாகத் திகழ்கிறான். இவரது தலைமையில் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டு இளைஞர்கள் இன்று போரிடுகிறார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 11 - 27**
**ஞாயிறு இரவு**

08.01 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''கவடுகளில் நடம் பதிப்போம்''
08. 20 - தாயகப்பாடல்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - தொடர் நாடகம் -பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண்''-48 ம் அங்கம்
9. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994 - 11 - 28**
**திங்கள் காலை**

07. 02 - மாவீர வணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# எமது மக்கள் தமது முதலீடுகளை தமிழீழ வைப்பகத்தில் வைக்கட்டும்

- வே. பாலகுமாரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களால் கொழும்பு வங்கிகளில் முதலீடு செய்யப்படும் பணம் தமிழினத்தை அழிப்பதற்கே உதவும் என விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன் குறிப்பிட்டார்.

நேற்று தமிழீழ வைப்பகத்தில் நடைபெற்ற மாவீரர் நிதியத்தின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. பாலகுமாரன் தொடர்ந்து பேசுகையில்;

கொழும்பு வங்கிகளில்தமிழ் மக்களால் வைப்பிலிடப்படும் பெருந்தொகைபணம் சிங்கள, அரசுக்கு குண்டு வாங்கவே உதவும். இக்குண்டுகள்தமிழர் மீது தாக்குதல் நடத்தவே உதவும்.

ஆகவே நாம் விழிப்பாக இருக்க வேண்டும். இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

எமது மக்கள் தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்ய வேண்டும்.இதன் மூலம் எமது தேசத்தை அபிவிருத்தி செய்யவும் மேம்படுத்தவும் அந்த நிதி பயன்படும்.

மாவீரர்கள் தமக்கென எதுவும் எதிர்பாராமல் நாட்டுக்காக தம்முயிரைஅர்ப்பணித்தவர்கள் இந்த புதிய 'மாவீரர் நிதியத்தின்' மூலம் மாவீரர்களின் உறவினர்களுக்கு உதவி செய்யலாம் என்பதே இந்த நிதியத்தின் நோக்கம்.

இச் சந்தர்ப்பத்தை எமது மக்கள் பயன்படுத்தி இத் தேசத்தின் விடுதலைக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றார். (தி)(பா)

# மாவீரர் நிதியம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வைப்பகத்தில் நேற்றுக் காலை 11. 00 மணியளவில் நடைபெற்ற மாவீரர் நிதியம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் திரு. பொன் தியாகமும் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. பாலகுமாரனும்மங்களவிளக்கு ஏற்றி வைத்தனர்.

நிதியைவைப்பிலிடுவதற்காக தனியார் வர்த்தகர்கள் பலரும் வந்திருந்தனர்.

யாழ். வணிகர் கழகம், மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம், வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தோர் முதலில் சம்பிரதாயபூர்வமாக நிதியை வைப்பிலிட்டனர்.

பின்னர் பலரும் திரண்டு வந்து நிதி வைப்புச் செய்தனர்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக், தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (தி, பா)

## புல் துண்டங்கள் விநியோகம்

முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பராமரிக்கப்படும் பேராற்று நல்லின புல் வளர்ப்புத் திட்டத்திலிருந்து 'பூசா ஜயன்ற்றேப் பியர்' என்ற ரக என் பி 21 என்ற புல் இன துண்டங்கள் பண்ணையாளர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இம்மாரிகாலத்தில் இப்புல் துண்டங்களை நடும் பட்சத்தில் உடனடியாக புல் துண்டங்கள் தழைக்க ஆரம்பிக்கும். எனவே தேவையான பண்ணையாளர்கள் புல் துண்டங்களை பெற்று நடுமாறு வேண்டப்படுகின்றனர். இப் புல் துண்டங்களை பெறுவதாக இருந்தால் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## இலவச மூக்குக் கண்ணாடி

(கொழும்புத்துறை)

மானிப்பாய் லயன்ஸ் கழகம் அனுசரணையுடன் மானிப்பாய் பரிஷ்பிரிவைச் சேர்ந்த வறுமை நிலையிலுள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் வைத்து இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் அறிவித்தார். (24)

# விளையாட்டு பொருட்களை உடைத்துபார்க்கும்ராணுவம்

(தென்மராட்சி)

தாண்டிக்குளம் தடைமுகாமில் விளையாட்டுப் பொருட்களைக்கூட இராணுவத்தினால் உடைத்துப் பார்க்கப்படுகின்றனவாம்.

இதனால் கொழும்பில் இருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வவுனியா தாண்டிக்குளம் ஊடாக யாழ். வரும் பயணிகளிடம், பயணிகள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களை வாங்கி வரமுடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த வாரம் கனடாவில் இருந்து வந்த ஒருவரிடம் அவர் கொண்டுவந்த விளையாட்டு பிளேன், கார் என்பனவற்றை பரிசீலிப்பதாகக்கூறி அவற்றை உடைத்துக் கொடுத்துள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினர் பயணிகள் கொண்டு வரும் பொருட்களை கடுமையாகசோதிப்பதாகவும், இளைஞர்கள், யுவதிகள் கொழும்பில் இருந்து யாழ்வருபவர்கள் யாழ் இருந்து கொழும்பு செல்பவர்கள் தீவிர சோதனைக்குஉட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (86)

## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் உளவிருத்தியை வளர்க்கும் நோக்குடன் ஈழநாதம் மக்கள் தினசரி, சிறுவர் அரங்கு எனும் புதிய பகுதியை விரைவில் தரவுள்ளது. மேற்படி அரங்கை அணிசெய்ய வாசகர்களிடமிருந்தும், சிறுவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இப்பகுதியில் பொதுஅறிவு எனும்வகையில்புதிய தகவல்கள் பலவும் வெளிவரவிருக்கின்றன.


## புதிய நிர்வாகத்தின் கீழ் கட்டணக் குறைப்புடன் புதிய அனுமதிகள்

பெற்றோர் மாணவர் கவனத்துக்கு

வடமராட்சியில் இருநகர் பிரதேசங்களில்
மாணவர் கல்வி நலன் காக்கும் சேவை
**கல்வி ஆண்டு 1995**
புதிய கட்டண விபரங்கள்
**ஆண்டு ->9-11-வரை 65 ரூபா மட்டும்**
**ஆண்டு -> 5-8 -வரை=55 ரூபா மட்டும்**
மாணவர்கள் பெற்றோருடன் வந்து அனுமதி பெறுவது நன்று
01-12-1994க்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

**யங்றோயல்ஸ்**
கல்வி நிறுவனம்
நெல்லியடி,கரவெட்டி.

**N. C. A**
கல்வி நிறுவனம்
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
(10170)

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனம்
கீழைத்தேய. மேலைத்தேய. இசைக்குழுவினர்
வழங்கும்

## கிறிஸ்து பிறப்பு இசை வழிபாடு
**CHRISTMAS CAROLS**

காலம்: 04-12-1994 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு
இடம்: மேபல் தம்பையா மண்டபம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்

ஆதீனக் காரியாலயம், வட்டுக்கோட்டை.
திரு. ஜி. இராஜநாயகம் அமைப்பாளர்
(சி-10759)

## நினைவு கூருகின்றோம்...

**27.11.1994**

1982-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகையின் போது விழுப்புண்ணடைந்து தமிழகத்தில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய,

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதன்முதல் விதையான வீரவேங்கை,

**லெப் சங்கர்/சுரேஸ்** (செல்வச்சந்திரன் சத்தியநாதன் - கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

1987-ம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**துமிலன்** (இராஜகோபால் ரவிச்சந்திரன் - தம்பலகமம் - திருமலை)

முள்ளியவளை, தண்ணீரூற்றுப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அமலன்** (முருகேசு உருத்திரமூர்த்தி-செம்மலை, அளம்பில் - மணலாறு)

யாழ் - பேராலயத்தினுள் புகுந்த இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**மரியநாயகம் யூட்சங்காரியார் சந்திரகுமார்** (யாழ்)

1989-ம் ஆண்டு பொலிகண்டிப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். றிச்சாட்** (இராமசாமி குணராசா - இறக்கண்டி - திருமலை)

ஒலிப் பகுதியில் இந்தியப்படையினர் சுற்றிவளைத்துச் சுட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தினேஸ்** (தில்லைநாயகம் அன்ரன் தினேஸ் -புலோப்பளை - பளை)

நாட்டுப்பற்றாளரான,

**பவுண்** (தம்பகாமம் - பளை)

புலோப்பளைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சுதா** (கனகசபை சுதாகரன் - சூட்டிவீதி, மாசார் - பளை)

1991-ஆண்டு நடமாடும் பிரதேச அலுவலகத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**சிவா**

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பகுதியில் ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**லெப். கணேஸ்** (சாம்பசிவம் தயானந்தன் - மண்டூர் - மட்டு)

வவுனியா-மாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின்காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய

**ஈஸ்வரன்/கில்மன்** (வேலுப்பிள்ளை புஸ்பராசா - மகிழடித்தீவு - மட்டு)

1993-ம் ஆண்டு மட்டு - பாலம்போட்டாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தவபாலன்** (கிருஸ்ணபிள்ளை சிவராசா - குருக்கள்மடம் - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10789)

## அறிவித்தல்

வட இலங்கை நுண்கலை மன்ற சான்றிதழ் வழங்கல் தொடர்பான புகைப் படங்களை திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளவும்.

**''கலையகம்''**
இல. 6, பென்டிக்கோஸ் வீதி,
கச்சேரியடி.

(10208)

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். கிளை - இல. 1

விடுக்கும் அன்பான

## வேண்டுகோள்

தேசத்தின் விடிவுக்காக தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் நினைவு வாரத்தின் இறுதிநாள் இன்று 27-11-94 ஞாயிற்றுக்கிழமை. இம் மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம், பிற்பகல் 3மணிக்கு யாழ். இலுப்பையடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் அணிவகுப்பு ஊர்வலம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தை சேர்ந்ததைத் தொடர்ந்து நடைபெறும்.

ஊர்வலத்திலும், வீரவணக்கக் கூட்டத்திலும் அனைத்து அங்கத்தினர்களும் தமிழீழ மக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர்;
அ. றொபேட்

(சி-10795)

புதிய கல்வியாண்டில் சேரும்

## மாணவருக்கான அறிவிப்பு அடுத்த மாதம் வரும்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் அடுத்த கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அறிவித்தல்கள் அடுத்த மாதத்தின் நடுப்பகுதியில் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கிடைக்கலாமென தெரிய வருகிறது.

எட்டுப் பல்கலைக்கழகங்களிலும் உள்ள பல்வேறு பீடங்களுக்குமான சராசரி வெட்டுப் புள்ளிகள் டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.

ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின்

## மாகாண நிருபர்களுக்கு தனிச்சிங்களத்தில் கடிதம்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் அண்மையில் நியமனம் செய்திருக்கும் மாகாணத் தமிழ் நிருபர்களுக்கான சகல கடிதங்களையும் தனிச்சிங்களத்திலேயே அனுப்பி இருக்கிறது. கூட்டுத்தாபனம் நடத்த இருக்கும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்ட கடிதமே தனிச்சிங்களத்தில் வந்துள்ளது. அத்துடன் இணைக்கப்பட்டிருந்த கேள்விக்கொத்து ஒன்றும் தனிச்சிங்களத்திலேயே கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகரப் பகுதியில் தொற்று நோய் ஆபத்து

### சுகாதாரம் பேணுமாறு வலியுறுத்து

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரப் பகுதியில் தற்போது தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாகப் பெரும்பாலும் குடல் சார்ந்த தொற்று நோய்கள் பரவும் ஏது நிலை காணப்படுவதாக யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் கூறியுள்ளனர்.

மக்கள் தங்கள் நாளாந்த சுகாதார நடைமுறைகளைப் பேணாவிடில் பல தொற்று நோய்கள், நெருப்புக் காய்ச்சல், செங்கண்மாரி, வாந்திபேதி, வயிற்றோட்டம், இளம்பிள்ளை வாதம், மலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடும். சில இடங்களில் நோய் ஆரம்பிக்கும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

இந்நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு பொதுச் சுகாதார வழி முறைகளை பின்பற்றுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களும், யாழ். மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. து. மகாதேவன் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

### விதைநெல் விநியோகம்

1994/-95 காலபோக நெற்செய்கையாளரின் நன்மை கருதி விவசாய திணைக்களத்திலிருந்து தருவிக்கப்பட்ட தரமான உயர் விளைவைப் பெறக்கூடிய தூய இன நெல் வகைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

பசுமை வேளாண் சேவை நிலையத்தினூடாக விநியோகிக்கப்பட்டு வரும் நெல் இனங்களான பி.ஜி 350, பி.டபிள்யூ 351, பி.ஜி 300, பி.ஜி 500 ஆகிய சிறந்த இன நெல் விதைகளை பயிரிடுவதன் மூலம் உயர்விளைவை பெற்று நாட்டின் உற்பத்தியை மேம்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

## யா.மாநகர உணவகங்களில் திடீர் சுகாதார சோதனை

(கொழும்புத்துறை)

யாழ் மநகரசபைப்பகுதியில் உள்ள உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் மீது கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். மாநகரசபை நகர்ப்புறப்பகுதிப் பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. து. மகாதேவன், உணவுப் பரிசோதகர் திரு. ஆ. ஜீவநாதன் ஆகிய இருவரும் நகர்ப்புறப்பகுதியில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மழை காலத்தைக் கருத்திக் கொண்டு தொற்று நோய்கள் பரவாதும் குடல் சார்ந்த நோய்கள் அதிகரித்து வருவதாலும் உணவகங்கள் தேநீர்ச்சாலைகள் மீது இத்திடீர்ப்பரிசோதனைகள மேற்கொள்ளப்பட்டன.

பொது மக்களின் நலன் கருதி உணவை மூடி ஈக்களிலிருந்தும், இலையானிலிருந்தும் பாதுகாத்து வைக்குமாறும், மலகூடம் பாவித்த பின்பு உணவு உட்கொள்ள முன்பும் கைகளை சவர்க்கார மிட்டு கழுவுமாறும், பாவனையாளருக்கு பாதுகாப்பான துப்புரவான குடி நீர் வழங்குவதை உணவக உரிமையாளர்கள், தேநீர்ச் சாலை உரிமையாளர்கள் சகலரும் உறுதிப்படுத்தல் அவசியம் எனவும், இவற்றை நடைமுறைப் படுத்தத்தவறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. து. மகாதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி கூறிய விடயங்கள் யாவற்றையும் ஒருவாரத்துக்குள் நடைமுறைப்படுத்தாவிட்டால் சில உணவகங்கள் மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் இவை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் கூறியுள்ளார். மேற்படி சகல உரிமையாளர்களும் இவற்றை மேற் கூறிய வண்ணம் செய்யத்தவறுமிடத்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என அவர் அறிவித்தார். (24)

### குடும்ப விபரங்கள் புதிதாக திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பகுதியிலும் ''புதிய குடும்ப விபரத்திரட்டு'' பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து கிராம அலுவலர்கள் பிரிவுகளில் உள்ள சகல குடும்பங்களும் இப்பதிவினை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு குடும்பமும் குடும்ப பதிவு அட்டை, அடையாள அட்டை மற்றும் ரூபா 5 ஆகியவற்றுடன் சமுகமளித்து விபரங்களை உடன் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [05]

### சேவைக்காலப் பயிற்சிக்கருத்தரங்கு

வலயம் இரண்டு பாடசாலைகளில் க.பொ.த (உ/த) இல் இரசாயனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி ஒன்று எதிர்வரும் செவ்வாய் காலை 8 30 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ் அமர்வில் க.பொ.த (உ/த)-தொண்டைமானாறு வெளிக்களநிலைய பொதுப் பரீட்சைக்கான இரசாயன பாட புள்ளியிடும் திட்டம் பற்றி கலந்துரையாடப்பட இருப்பதாக வலயம் இரண்டின் விஞ்ஞானக் கல்வி அதிகாரி தெரிவிக்கின்றார்.

## பெண்புலிப் போராளிகளிடம் ஆன்மீக சக்தி ஒன்றைக் கண்டேன்

### பி.பி.ஸியில் வாஸந்தி

(லண்டன்)

நான் யாழ்ப்பாணத்தில் பெண் விடுதலைப் புலிகளைப் பார்த்தபோது அவர்களிடையே உள்ள ஓர் ஆன்மீக சக்தி இருப்பதைக் கண்டேன். பெண்களினுள் இருக்கும் அந்த சக்தியை அம்மாதிரியான அசாதாரண சந்தர்ப்பங்களில் தான் எமக்கே வெளிப்படுகின்றது. அதை உணர்கின்றோம் என இந்தியா டுடேயின் தமிழ் பதிப்பின் ஆசிரியர் வாஸந்தி பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அண்மையில் நான் அமெரிக்காவில் பெண்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டேன். அதிலிருந்து நாம் மேலைநாட்டுப் பெண்கள் சுதந்திரமானவர்கள் என்று கருதுவது முழுத்தவறு எனக் கண்டுகொண்டேன்.

நமது கீழ்நாட்டுப் பெண்களிடையே ஒருவித ஆன்மீக சக்தி இருப்பது போலவே எனக்கு தெரிகின்றது. இது தான் எம் பெண்களை தம் காலில் நிற்கவைக்கிறது. இந்த சக்தியைத்தான் நான் யாழ்ப்பாணத்தில் கண்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாதுகாப்புக் குழுவிற்கு

## முன் அனுபவம் இல்லாதவர் பணிப்பாளராக நியமனம்

### -ஆய்வுக்குழு அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புக்கு பொறுப்பான பி. எஸ். டியின் தலைவராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள டி. ஐ. ஜி. பாலசூரிய இத்துறையில் முன் அனுபவம் எதுவும் இல்லாதவர் மூத்த பொலிஸ் அதிகாரிகள் பலர் இருக்கும்போதும் இவர் டி.ஐ.ஜி. அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந் நியமனம் அரசியல் காரணங்களுக்காகவே செய்யப்பட்டுள்ளது இவ்வாறு சிறிலங்காவில அதி முக்கியத்துவப் பிரமுகர்களின் பாதுகாப்புக் குறித்து ஆய்வு செய்த அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்ட மிக இரகசிய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான பி எஸ். டி குழுவினர் பெரும்பாலும் விசுவாசத்தின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுகின்றனர் பிரேமதாசா காலத்தில், இருந்தவர்களில் பலர் மீண்டும் விஜேதுங்காவின் காலத்திலும் இப் பிரிவில் கடமையாற்றினர் இத்தகைய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்போது திறமையிலும் பார்க்க நம்பிக்கையான விசுவாசம் என்பது முதலிடம் பெறுகிறது இது முற்றிலும் உண்மை பொலிஸ் அதிகாரிகளாக இருக்கும்போது வாகன சாரதிகளாக கடமையாற்றுவோர் ஆயுதங்கள் தாங்குவதில்லை அது மட்டுமன்றி இத்தகைய சாரதிகளில் பலர் திறமையான சாரதிகள் அல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது பி. எஸ்.டி. குழுவினர் தமக்கான பயிற்சி வசதிகளையும், சுடுகலன்களை புதுப்பிக்கும் வசதிகளையும் கொண்டிருக்கின்றனர் இதன் பணிப்பாளரான பாலசூரிய கட்டுக் குருந்தவிலுள்ள அதிரடிப் படையினரின் பயிற்சிக்கு உட்பட்டவரல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

காமினி திசாநாயக்கா கொலை விவகாரம்

## எவ்வித உதவி தேவையென இந்தியா சிறிலங்கா அரசிடம் கோரிக்கை

காமினி திசாநாயக்கா கொலை தொடர்பாக எத்தகைய உதவி தேவை என இந்தியா சிறிலங்கா அரசைக் கோரியுள்ளதாக வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான இந்திய அரசின் கடிதம் நேற்றுமுன்தினமே தமக்கு கிடைத்ததாக குறிப்பிட்ட அமைச்சர் விசாரணையில் எத்தகைய உதவி தேவை என்பதை பொலிஸ்மா அதிபரே தீர்மானிப்பார் என்றார்.

## ஹைபோரஸ்ட் தோட்டத்தில் 12 பேர் பொலிசாரால் கைது

### மேலும் பலர் தேடப்படுகின்றனர்

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஹைபோரஸ்ட் தோட்டத்தில் பன்னிரண்டுக்கும் அதிகமான இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 45க்கு அதிகமானோர் தொடர்ந்தும் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாக, ஜனாதிபதி தேர்தலையடுத்து சில அரசியல் சக்திகள் தோட்டத்தொழிலாளர்களுக்குள் தொடர்ந்தும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதாகவும், இதனால் அசம்பாவிதங்கள் நிகழ்வதாகவும் கூறப்படுகிறது. இதில் தோட்டத்தொழிலாளர்களும் பிரதேசசபை உறுப்பினர் ஒருவரும் தாக்கப்பட்டுள்ளனர் பலத்த காயங்களுடன் தொழிலாளர்கள் இருவர் உடபுசல்லாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் அத்துடன் பல கடைகள் கொள்ளையிடப்பட்டிருப்பதுடன் கடை ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டும் இருக்கிறது.

இவற்றின் எதிரொலியாக 1200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதுடன் பிரச்சினைகள் ஏற்படுத்திவரும் அரசியல் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கட்டுநாயக்காவில் தமிழ்ப்பயணிகளிடம் 'சம்திங்' பெறுவதற்காக கெடுபிடி

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழர்களிடமிருந்து விமான நிலைய அதிகாரிகள் சிலர் சம்திங் அறவிடுவதில் குறியாக இருப்பதாகத் தெரியவருகின்றது

சுவீடனில் ஐந்து வருடம் வாழ்ந்த யாழ்ப்பாணப் பெண்மணி ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து தமது மாமியாரை சந்தித்து விட்டு மீண்டும்திரும்பியபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவ்வாறு சம்திங் கேட்டு அதிகாரிகளால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, தனது மூன்று பிள்ளைகளுடனும் பிற்பகல் 2.30 மணியளவில் விமான நிலையம் சென்ற இப்பெண்மணியின் பொதிகள் பரிசோதிக்கப்பட்டது. சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் தமக்கு சம்திங் தருமாறு கேட்டுக் கொண்டனர். அவர் அதற்கு மறுத்து விட்டார். விமான நிலையக் கட்டணத்தை செலுத்திய பின்னர் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் சென்றார். 'நீங்கள் பிள்ளைகளைக் கடத்திச் செல்கிறீர்கள். உங்கள் கடவுச்சீட்டில் தவறுகள் இருக்கிறது'' எனக் கூறிய அவ் அதிகாரிகள் அவரைத் தனியே தடுத்து வைத்தனர். மீண்டும் சம்திங் தரும்படியும், அவ்வாறு இல்லாவிட்டால் நீங்களும், பிள்ளைகளும் சுவீடன் செல்ல முடியாது எனவும் அவர்கள் மிரட்டினர்.

தன்னிடம் எதுவுமில்லையெனக் கூறி அவர் அழத் தொடங்கியதும் விடுவிக்கப்பட்டார் விமான நிலைய மண்டபத்தில் தங்கியிருந்த இப் பெண்ணிடம் மீண்டும் வந்த அவ் அதிகாரிகள் எமது உயர் அதிகாரி வந்துவிட்டார். உங்களிடமிருந்து ஏதாவது வாங்கி வருமாறு அவர் கூறினார் எனக் கூறி தொடர்ந்து மிரட்டினர்.

## தோட்டங்களில் குடியேற சிங்களவர்கள் முயற்சி

(கொழும்பு)

தனியார் தோட்டங்களில் அத்துமீறிக் குடியேற சிங்களக் கிராமவாசிகள் முயற்சி எடுத்துள்ளனர் கலகெதர பொலிஸ் பிரிவைச் சேர்ந்த டிக்கோயா, லோட்டஸ், ட்ரலோத் ஹில், அல்கொல்ல, நீட்லூட் ஆகிய தோட்டங்களில் அருகாமையிலுள்ள கிராமத்தவர்களில் பலர் இத்தோட்டங்களில் திடீரெனக் குடியேறி சிறு சிறு குடில்களை அமைத்துக் கொண்டு நிரந்தரமாகவே குடியேற முயன்றனர்

பின்னர் தோட்ட உரிமையாளர்களின் புகாரையடுத்து இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனினும் பொலிசார் இவர்களிடம் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர்களை விடுவித்துவிட்டனர்.

## இந்திய அதிகாரிகள் குழு தலைமன்னார் விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களையும் – பறிக்கப்பட்ட படகுகளையும் மீட்டு செல்லவென இந்திய அதிகாரிகள் குழு ஒன்று தலைமன்னாருக்கு வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசின் அனுமதியுடன் வந்த இக் குழு – தலைமன்னார் அருகேயுள்ள குருசைக்காடு என்னுமிடத்தில் வைத்து மீனவர்களையும் படகுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஊர்காவற் படையினருடன் கிராமவாசிகள் மோதல்

### மொனராகலையில் சம்பவம்

[கொழும்பு]

கடந்த திங்கள் அதிகாலை ஆறுமணியளவில் மொனராகல மாவட்டம் கொரம்புவ பகுதியில் இருக்கும் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றில் கடமையில் இருந்த ஊர்காவற்படையினருக்கும், ஊர் மக்களுக்கும் இடையே இடம் பெற்ற மோதல்களில் ஆறு பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கான இருவர் பதுளை பொது வைத்திய சாலையிலும் ஏனையோர் மொனராகலை வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றனர்.

ஊர்காவல் படையினரின் அட்டகாசம் தாங்காது இத் தாக்குதல் நடத்தியதாக தெரியவருகிறது.

## ராகல கடைகளுக்கு விஷமிகள் மேலதிக பூட்டு

### உரிமையாளர்கள் திண்டாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல்நடைபெற்ற கடந்த ஒன்பதாம் திகதி இரவு இராகல நகரில் சுமார் 50 கடைகள் மேலதிக பூட்டுகளால் பூட்டப்பட்டன.

கடை உரிமையாளர்கள் தமது வியாபாரத்தை முடித்துக் கொண்டு வழமையான பூட்டுக்களால் பூட்டிவிட்டு சென்ற பின்னர் இனந்தெரியாதவர்கள் மேலதிக பூட்டுக்களைக் கொண்டு பூட்டியுள்ளனர். இதனால் இக் கடைகளை ஒருவார காலம் வரை திறக்க முடியாத நிலை கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்டது.

## அமைச்சரவை செலவினம் 870 லட்சரூபா குறைப்பு

(கொழும்பு)

சென்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைவிட அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதால்-வருடாந்தம் 8கோடி 70இலட்சம் ரூபாவை மீதப்படுத்த முடிவதாக- அரசியலமைப்பு விவகார, நீதி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேபோல், அமைச்சுக்களின் தேவையற்ற செலவினங்களும் கட்டுக்குள் கொண்டு வர தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொண்டாவின் திறமைகள் அரசு பயன்படுத்தலாம்

### சந்திரசேகரன் தெரிவிப்பு

[கொழும்பு]

தொண்டமான் போன்ற சிரேஷ்ட அரசியல் வாதிகளின் திறமைகளை தற்போதைய அரசாங்கம் நன்கு பயன் படுத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன் இவ்வாறு பிரதி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ. சந்திரசேகரன் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில்; மலையகத்தின் அனைத்து தொழிற் சங்கங்களும் தற்போது அரசை ஆதரித்து நிற்பதால் மலையக மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படுமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

## தொழில்நுட்பக் கல்லூரிகள் தகுந்தவிளைவை தரவில்லை

(கொழும்பு)

கடந்த பத்தாண்டுகளில் தகுந்த விளைவுகளை ஏற்படுத்துவதற்கு தொழினுட்ப கல்லூரிகள் திட்டம் தவறிவிட்டதாக — இது தொடர்பாக ஆராய்ந்த குழு ஒன்று தெரிவித்துள்ளது.

தொழினுட்ப கல்லூரிகளின் தரத்தை அதிகரிப்பதும், அவற்றிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதும் திருப்திகரமாக இல்லையெனவும், தெரிவிக்கப்பட்டது.

எச். என். டீ. ஏ எச் என் டீ சீ ஆகிய பயிற்சிகளை அபிவிருத்தி செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்காமல் போய்விட்டதாகவும், பெறப்படும் பரீட்சைமுடிவுகளும் மிகத்தாழ்நிலையில் இருப்பதாகவும் மேலும் அக்குழு தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கவிற்கு இப்போது சிறந்த கப்டன் வந்துள்ளார்

### - ஏ.ஜே.ரணசிங்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி என்ற கப்பலைக் காப்பாற்றுவதற்கு சிறந்த கப்டன் ஒருவர் இப்போது கிடைத்துள்ளார். இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டவருமான ஏ. ஜே. ரணசிங்க கூறியுள்ளார்.

தமது இல்லத்தில் கூடிய மக்கள் முன்னிலையில் பேசிய அவர் மேலும் கூறுகையில்' கொலை அச்சுறுத்தல்களுக்கும் மற்றும் பயமுறுத்தல்களுக்கும் பணியாது 'ராஜாளிய' என்ற கடற்கொள்ளைக் காரர்களிடமிருந்து ஐ.தே.க என்ற கப்பல் மீட்கப்படுவதற்கு நான் எடுத்த முயற்சி பயனளித்துள்ளது. கட்சி இனிமேல் நேரான வழியில் கொண்டு செல்லப்படுவதற்கு சிறந்த கப்டன் ஒருவர் கிடைத்துள்ளார். கடந்த சில காலங்களாக திறமையற்ற கப்டன்களின் கரங்களில் ஐ.தே.க. என்ற கப்பல் ஒப்படைக்கப்பட்டதால் கடற் கொள்ளைக்காரர்களிடம் அக் கட்சி சிக்க நேரிட்டது. ஏ ஜே ஆர் என்றால் நாகபாம்புகளின் அரசன் என்று தான் பொருள் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து நானும் நாகபாம்பு போல நடந்து, கொள்ளுவேன் எனவும்அவர் தெரிவித்தார்.

### மூவர் மட்டுமே புதியவர்கள்


(கொழும்பு)

மூன்று அமைச்சர்களின் செயலாளரைத் தவிர ஏனையோர் பழையவர்களே என ஜனாதிபதியின் செயலாளர் பலபத்தபெண்டி தெரிவித்துள்ளார் சென்ற புதன்கிழமை இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராமிய நிதியம் அறிமுகப்படுத்தும் மாவீரர் சோலை சேமிப்புத்திட்டம்

நீங்களும் பல இலட்சங்களுக்கு அதிபதியாகலாம்.
45-வது வருடத்தில் 10 இலட்சம் உங்கள் கைகளில்.
உங்கள் முதலீடு ஐயாயிரம் மட்டுமே.
குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம்.
பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளின்
உறுதியான வாழ்விற்கு உரமிடுங்கள்.
நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான்
எமது நிறுவனத்தின் கிராமிய நிதியத்தால் வழங்கப்படவுள்ள
கடன் பத்திரத்தினை கொள்வனவு செய்து பிறந்த உங்கள்
குழந்தைகளையும், அன்புக்குரியவர்களையும்

## இலட்சாதிபதியாக்குங்கள்.




தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

உங்கள் பணத்தை பாரிய தேக்கு நடுகைத் திட்டத்தில்
நாம் பயன்படுத்தி வருமானமாக உங்கள் கைகளில்

## 10-வது வருடத்தில் 15,000/-, 20-வது வருடத்தில் மேலும் 15,000/-
## 45-வது வருடத்தில் 10,00,000/- அள்ளித்தருவோம்.

**மாவீரர்களால் உருவாகும் நாட்டை பசிய ஆடைகளினால் போர்த்துங்கள்.**

தேக்கு உறுதியானது. இத்திட்டமும் தேக்கைப்போல் உறுதியானது!

## முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
கிராமிய நிதியம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

(சி/10791)

# பொஸ்னிய, சோமாலிய நிலைமையால் இலங்கை பிரச்சினை மறைக்கப்படுகின்றது

### அமெரிக்கப் பத்திரிகை கருத்து

(நியூயோர்க்)

பொஸ்னியாவின் படுமோசமான நிலையும், ருவாண்டா மற்றும் சோமாலியாவில் நடைபெற்றுவரும் பேரழிவுகளும் இலங்கைத்தீவில் நடைபெற்றுவரும் மோதல்களை இலகுவாக மறைக்கவைத்து விடுகின்றன. இவ்வாறு அமெரிக்காவில் வெளியிடப்படும் லொஸ் ஏன்ஜெல்ஸ் டைம்ஸ் பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இத்தலையங்கத்தில்மேலும் குறிப்பிடப்படுகையில் இந்த நாட்டில் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நடைபெற்றுவரும் இந்தப் போராட்டங்கள் காரணமாக முப்பத்தையாயிரம் பேருக்கு மேலான மக்கள் கொல்லப்பட்டு இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

திருமதி சந்திரிகாபண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இப்படுகொலைகள் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது கடந்த ஒரு தசாப்தகாலமாக இரத்தம் சிந்துகின்ற போராட்டத்தை நடத்துகின்ற தமிழ்க் கெரில்லாக்கள் பூரண சுதந்திரம் கிடைக்காது விடினும் ஓரளவு சுயாட்சியைப் பெற இதுவோர் நல்ல தருணமாக இருக்கலாம் எனவும் தெரிவித்து இருக்கிறது.

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

இராணுவ நடவடிக்கையின் போது பெற்றோரை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆண்டு ஐந்துக்குட்பட்ட மாணவர்களுக்கு யாழ் வட்டலியோ கழகத்தினர் அன்பளிப்பு பொருள்களை வழங்கியுள்ளனர்.

மேற்படி அன்பளிப்பு பொருள்கள் யாழ்.நற்சமூக நடு நிலையத்தில் வைத்து கடந்த புரட்டாதி மாதம் வழங்கப்பட்டது.

29 பாடசாலைகளைச் சேர்ந்த 245 மாணவர்கள் இதனால் பயன் பெற்றனர். (24)

# புதிய கொடி, சின்னம் உருவாக்க ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

புதிய கொடி ஒன்றையும், சின்னமொன்றையும் வடிவமைப்பதில் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கா ஈடுபட்டிருக்கிறார் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

எனினும் இது தொடர்பான இறுதி முடிவுகள் எடுப்பது ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்காக ஒத்திப் போடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் பயன்படுத்தப்பட்ட கொடி மற்றும் சின்னங்களை ஜனாதிபதி திருமதி சந்திரிகா பயன்படுத்துவதில்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன. தற்போது சிறிலங்கா குடியரசு என்ற லோகோவை மட்டும் கொண்ட கடிதத் தலைப்புகளை மட்டுமே ஜனாதிபதி பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

1978 முதல் பதவியிலிருந்த மூன்று ஐ. தே. க. ஜனாதிபதிகளும் தத்தமக்கென வெவ்வேறு கொடி மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி வந்தமை தெரிந்ததே. சிவப்பு வர்ணப் பின்னணியில் பொன்னிறத்திலான தர்ம சக்கரத்தை மத்தியில் கொண்டதாக நான்கு மூலைகளிலும் ஜய என்ற சிங்களச் சொல்லைக் கறுப்புநிறத்தில்கொண்டதாக ஜே. ஆர். ஜயவர்த்தனா தமது சின்னத்தை வடிவமைத்திருந்தார். வெள்ளையிலும், கருப்பச்சையிலும் இரண்டு பட்டிகள் கொண்டதாக அவரது கொடி வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதிலிருந்து சிறிது மாறுபட்டதாக பிரேமதாசா தமது கொடியையும், சின்னத்தையும் வடிவமைத்திருந்தார். ஒரேஞ் நிறப் பின்னணியில் வெள்ளைத் தாமரையைக் கொண்டதாக நான்கு மூலைகளிலும் அரச இலைகள் மத்தியை நோக்கி இருக்கத்தக்கதாக வடிவமைக்கப்பட்ட சின்னத்தை பிரமதாசா பயன்படுத்தி வந்தார். அத்துடன் இக்கொடியின் கரையில் பொன்னிறத்தில் நெற் கதிர்கள் பளபளக்க வெள்ளை மற்றும் பச்சைப் பட்டிகள் வரையப்பட்டிருந்தன.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது பொன்னிற வண்டிச் சக்கரமும், எட்டு அரச இலைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. அத்துடன் செந்தாமரை மலர்களைக் கொண்ட கரையும் இடம்பெற்றிருந்தது.

இவற்றை உன்னிப்பாக அவதானித்து புதிய கொடி மற்றும் சின்னத்தை வடிவமைப்பது பற்றியும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா இப்போது ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

# அடுத்தஆண்டின்பாடசாலை தவணை விடுமுறை நாட்கள்

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான பாடசாலைகளின் தவணை அட்டவணை கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரினால் அண்மையில் வெளியிடப்பட்டுடுள்ளது. அதன்படி அடுத்த ஆண்டின் முதல்தவணை ஜனவரி 2ம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 7ம் திகதி வரையுமாக இருக்கும். இரண்டாம் தவணைமே 2-ம் திகதி ஆரம்பமாகி ஜூலை 28 வரையும் மூன்றாம் தவணை ஆகஸ்ட் 28-ல் ஆரம்பமாகி டிசம்பர் 1-ம் திகதி வரை நீடிக்கும்.

# வீதிவிபத்துக்கள் மூலம் தினமும் 12பேர் மரணம்

(கொழும்பு)

நாளொன்றுக்கு 12 பேர் என்ற அடிப்படையில் வீதி விபத்துக்களால் மரணமடைவோர் தொகை அதிகரித்து இருப்பதாக போக்குவரத்து பொலிசாரின் அறிக்கைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

அவ் அறிக்கையின் மூலம் தெரியவருவதாவது வீதி விபத்துக்களால் மரணமடைவோர் தொகை ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சைக்கிளோட்டிகளாலும், மோட்டார் சைக்கிளோட்டிகளாலும் விபத்துக்கள் ஏற்படுவது அதிகரித்துக் கொண்டு வருகின்றது. மோட்டார் சைக்கிள்கள் இப்போது ஆபத்து மிக்க வாகனங்களாக மாறியிருக்கின்றன. இந்த வருடத்தில் மட்டும் மோட்டார் சைக்கிள்களால் மோதுண்டு 28 பேர் மரணமாகியுள்ளனர்.

# நவீன் திசாநாயக்காவை ஐ. தே. க. சேர்க்க முயற்சி

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்காமினி திசாநாயக்காவின் புதல்வரான நவீன் திசாநாயக்காவை அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்கு பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐ. தே. கவிற்கு ஆதரவாளர்கள் மட்டத்தில் இருந்து இதற்கான அழைப்புகள் விடுக்கப்பட்டு வருவதுடன் வேறுபல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகின்றது.

ஆனும் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கும் நவீன் திசாநாயக்கா ஐ. தே. கவின் நிர்வாகபீடம் தம்மை முறைப்படி அழைத்தால் ஐ. தே. கவில் இணைந்துகொண்டு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு நல்க தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

முன்னாள் பா. உகள் செய்த

# தீர்வையற்ற வாகன இறக்குமதி அரசாங்க மட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்ற 33 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் விடயம் தொடர்பாக பலத்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

தற்போதும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத இவர்களுக்கு தீர்வையற்ற விதத்தில் இவ் வாகனங்களை வழங்கலாமா என்பது குறித்து அரசாங்க மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

ஜயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வையற்ற வகையில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளித்திருந்ததும், டி. பி விஜேதுங்க மூன்று வருடத்திற்கு ஒரு முறை இவ் வசதியை அளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னைய அரசின் இறுதிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதியின் பாரியாரான திருமதி ஹேமா பிரேமதாசாவுக்காக இறக்குமதி செய்த குளிர் சாதன வசதி பொருத்தப்பட்ட பஜீரோ வாகனமும் இப்போது கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளது.

முன்னாள் முதற் பெண்மணி ஒருவர் அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவை அந்தஸ்துடையவராக கருதப்படவேண்டும் என்பதும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா இறுதியாக1988ல் இத்தகைய வாகனம் ஒன்றை இறக்குமதி செய்திருந்ததும் தெரிந்ததே.

முன்னாள் அரசியல்வாதிகளின்

# துப்பாக்கி மீட்டெடுப்பதில் பொலிசார் தீவிரம்

(கொழும்பு)

முன்னைய அரசினால் 1988, 89ம் ஆண்டு காலத்தில் பிரபல அரசியல்வாதி ஒருவரால் வழங்கப்பட்ட நூறுக்கும் மேற்பட்ட ஆயுதங்களை மீண்டும் கைப்பற்றுவதில் நீர்கொழும்பு பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்

முன்னைய அரசின் காலத்தில் அமைச்சர் ஒருவருக்கு 39 துப்பாக்கிகளும், ஆறு ரிப்பீட்டர் துப்பாக்கிகளும் வழங்கப்பட்டு இருந்தது. இவ் ஆயுதங்கள் அவ் அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரான சில்வா என்பவரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. இவற்றை விட மேலும் 40 துப்பாக்கிகள் களஞ்சிய சாலையிலிருந்து காணாமற் போயிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# மாவீரர்களின் பெற்றோர் தென்மராட்சியில் கௌரவிப்பு

(தென்மராட்சி)

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் வைபவம் நேற்று தென்மராட்சியில் வட்டவை ரீதியாக இடம்பெற்றது.

ஒவ்வொரு வட்டவையும், தத்தம் வட்டவைக்குட்பட்ட பகுதியிலுள்ள ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலைகளில் வைத்து மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். கைதடிமுத்துக்குமார சுவாமி வித்தியாலயம், யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி யா - உசன் இராமநாதன் கல்லூரி என்பவற்றில் பெற்றோர்களைக் கௌரவிக்கும் வைபவங்கள் இடம்பெற்றன.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து மாவீரர் நினைவாலயங்களிலும் போராளிகள், மற்றும் பொது மக்கள் மலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (86)

# புதுடில்லிக்கான தூதுவராக மங்கள முனசிங்க நியமனம்?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மங்கள முனசிங்கவை புதுடில்லிக்கான சிறிலங்கா தூதுவராக நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

திருமதி சந்திரிகாதலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதைத்தொடர்ந்து புதுடில்லிக்கான சிறிலங்காத் தூதுவர் பேர்னாட் திலகரட்ண மீள அழைக்கப்பட்டது தெரிந்ததே. அவரது இடத்துக்கு மங்கள முனசிங்க நியமிக்கப் படவுள்ளார்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது இனப் பிரச்சினைக்கான தீர்வை முன் வைப்பதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக மங்கள முனசிங்க செயற்பட்டவர் என்பது தெரிந்ததே.

அடுத்த மாதத்தின் முதற் பகுதியில் வெளிநாட்டு அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமர் புதுடில்லிக்கு செல்லும் போது மங்கள முனசிங்காவின் நியமனம் உத்தியோக பூர்வமாக உறுதிசெய்யப்படலாம் எனவும் மேலும் கூறப்படுகிறது.

# தேசத்தின் தேவைஅறிந்து தேகத்தை ஈகம் செய்தோர்

### -வணிகர் கழகங்களின் இணையம்

தேசத்தின் தேவை அறிந்து தேகத்தை ஈகம் செய்த மாவீரர் நாள் தமிழ்த் தேசமே திரண்டெடுக்கும் பெருவிழா.

மக்களையும், மண்ணையும் மொழியையும்தொலை நோக்கில் பார்த்த தேசியத் தலைவர் அணிவகுக்க தேசத்தின் தேவையைச் சரியாகப் புரிந்த தமிழினத்தின் இளைய சமூகம் தலைவனின் அணியில் திரண்டு சென்று ஆயுதம் ஏந்தி இன்று உலகமே வியந்து விழித்து நிற்கும் சுதந்திர விடுதலை புருஷர்களை நாம் பார்க்கையில் மக்களுக்கும், மண்ணுக்கும், மொழிக்கும் கிடைத்த காலத்தின் வரப்பிரசாதம் மட்டுமல்ல தமிழினத்தின் மதிப்பு மிக்க பெரும் சொத்துக்களாகி உள்ளன.

இந்த மதிப்பிட முடியாத பெரும் சொத்துக்களை காக்கவும், பேணவும், கௌரவிக்கவும் வேண்டிய பொறுப்பும் தேவையும் இந்த மண்ணில் வாழுகின்ற மக்களினதும், பொதுஜன அமைப்புகளினதும் கட்டாய தேவையும் அவசியமுமாகும்காலத்தின்தேவையோடு நாம் சிந்தித்து செயலாற்றும் பழக்கத்தையும் வழக்கத்தையும் இந்த தலைமையிலேயே கற்க வேண்டியவைகள் நிறைய உண்டு.

எனவே இத் தலைமையை தவற விட்டு எங்கும் மக்களாக நாம் இராது காலத்தோடும், தேவையோடும் ஒத்தோடும் காலதேவதையாக நாம் இக் கணமே மாறி இம் மாவீரர் நாளை பயன் உள்ளதாக்குவோம்.

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

உயிர்க் கொல்லியான கசிப்பை உற்பத்தி செய்து தம் வசம் வைத்திருந்த குற்றவாளிக்கு தமிழீழ நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

# போர் நிறுத்தம் எதையும் அரசு அறிவிக்கவில்லை

### - ஹமில்டன் வணசிங்க

(கொழும்பு)

ஆயுதப்படையினர் தரப்பிலிருந்து போர் நிறுத்தம் எதுவும் அறிவிக்கப்படவில்லை இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கடந்த புதனன்று தெரிவித்தார்

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், வடபகுதியிலுள்ள இராணுவத்தினர் எந்த நிலைமையையும் சமாளிக்கும் விதத்தில் விழிப்பாக இருப்பதாக தெரிவித்தார்.

இதே வேளை அரசாங்க தரப்புடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் போது விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தக் கூடும் என எதிர்பார்ப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. அத்துடன் ஐ தே. கவின் காலத்தில் செய்யப்பட்ட தவறு மீண்டும் இழைக்கப்படடுவிடக்கூடாது என்பதில் படையினர் அவதானமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# இதயத்தில் ஒலித்திடும் வீரவரலாறு

மண்ணுக்காய் மரணித்த மாவீரா - உன்
எண்ணத்தை நிறைவேற்ற எழுகின்றோம்
நாம் எழுகின்றோம்.
கண்ணான எம்மண்ணும் மொழியதுவும்
கருத்தாக்க கொண்டிங்கு வாழுகின்றோம்
உண்ணாமல் உறங்காமல் காக்கின்றோம்
உயிராக உணர்வாகக் காண்கின்றோம்
(மண்ணு)

ஒப்பில்லாத் தலைவனவன் வழிகாட்ட
ஒன்றாக அணிவகுத்துச் செல்கின்றோம்
எப்போதும் எம்தாகம் தமிழீழம்
என்றேதான் ஒலிக்கின்றோம் பெருங்கீதம்
(மண்ணு)

பொன்னான உன்பாதச் சுவடுகளை
பொறுப்போடு பின்தொடர்ந்து நடக்கின்றோம்
எந்நாளும் உன்வீர வரலாறு
இதயத்தில் ஒலித்திடுமே உயிர்மூச்சு
(மண்ணு)

விடுதலைக்கு வித்திட்ட மறவன்நீ
வேங்கையதாய் களந்தனிலே பாய்ந்திட்டீர்
தொடுகிறதே தியாகத்தின் எல்லையதை
தோழர்நாம் தொடருகிறோம் உன்பாதை
(மண்ணு)

- வ. யோகானந்தசிவம்

# கல்லறையில் ஒரு சபதம்!

தாயகத்தை மீட்பதற்கு
தன்னுயிரை ஈந்தவர்கள்
தன்மானம் கொண்டு தரணியிலே
எழுந்தவர்கள் மாவீரர்கள்.
தமிழ் மானம் ஒன்றே நெஞ்சினிலே.
கொண்டவர்கள் தணலாக எரிந்தவர்கள்
தமிழ் மண்ணிலே விதையாகி விட்டவர்கள்.
வரும் காலம் வாழவென்று நிகழ்காலத்தில்
இறந்தவர்கள் மாவீரர்கள்.
செந்தமிழை காக்க வென்று
செந்தணலாய் நின்றவர்கள் - வாசல்
வந்த பகை முடித்து விட்டு
வெற்றி வாகை சூடிச் சென்றவர்கள்.
அன்னியனின் ஆயுதத்தை அள்ளிக் கையில்
தந்தவர்கள்
துள்ளி வந்த பகை முடிக்க - கையில்
கொள்ளி கொண்டு போனவர்கள்.
வந்த பகை முடித்து விட்டு - தமிழ்
வானத்திற்கு சென்றவர்கள்.
எங்கள் மாவீரர்கள்
மண்ணிலே பற்றுக் கொண்டு
மரணத்தை தொட்டவர்கள - நம்
கண்ணிலே நீர் வழிய
கலங்க வைத்துச் சென்றவர்கள்.
விண்ணிலே மறைந்தாலும் - தமிழர்
நெஞ்சிலே வாழ்வர்கள - என்றும்
விடிவிற்காய் விழுந்த நம் வீரர்கள்
மாவீரர்கள்
இளமையின் கனவுகளை - எங்கே
நீர் புதைத்தீர்கள் ஐயா
கழுத்தில் விடம் தரித்து - செங்களம்
சென்றீர்கள
விடியலைத் தேடி வீர நடை போட்டீர்கள்
விடியும் முன்னரே வீரச்சாவடைந்தீர்கள்.
உதிரத்தை உரமாக்கி உடலை வித்தாக்கி
இங்கு நீர் விட்டு விட்டு
எங்கு நீர் சென்றீர்கள - வீர
சொர்க்கத்தில் இருப்பவரே - நாங்கள்
கல்லறைக்குள் தேடுகின்றோம்
கல்லறையில் விளக்கேற்றி - உம்
காதிலே ஒரு சபதம் உரைக்கின்றோம்.
தமிழ் தேசம் உம்மால் என்றோ ஒருநாள்
அது விடியும் வரை
உங்கள் சுவடுகளில் எங்கள் பாதங்கள்
அணி வகுத்து தொடரும் தொடரும் என்றும்!

கெ. விசாகேசன்

# மோதும் தென்றல் புயலாகும்

நெஞ்சிலே . . .
நெருப்பைச்சுமந்து,
கண்களிலே . . .
விடுதலைக் கனவோடு
கயவர்கள் அழிவிற்காய் . . .
களம்தனில் உயிர் ஈந்த
எம் நாயகர்கள்
காலடி பட்ட புல்வெளிகள்
மீண்டும் இவர்கள்
வரவுக்காய்...
புதுக்கவிதைகள் பாடி இருக்கும்.

எப்போது வருவார்
எங்கள் மாமாவென்று
இவர்கள் முத்தம் பெற்ற
இளம் பூக்கள
நாளைய புலிகள்...
மீண்டும் முத்தத்திற்காய்
விழிகள வாசலில் பதித்து
ஏக்கமுடன் காத்திருக்கும்.

சொந்தங்களை .....
துறந்தவர்கள்,
சுகங்களை...
மறந்தவர்கள்
தூக்கங்களில் இருந்து...
தூரமாகிப் போனவர்கள்,
களமாடிய வெளிகளிலே...
சுமந்த உடல்களுடன்
சாய்ந்து நின்ற பனைமரங்கள்...
இவர்கள் வீரத்தை,
விண்ணிடையே ஓதும்.

மண்ணிற்காய்
மரணத்தை தழுவிக் கொண்ட,
இவர்கள் துயிலும்
கல்லறையோரம்...
மோதுகின்ற தென்றற்காற்றும்
புயலாய்ப் பிரசவித்து
எதிரியின் பாசறைகளை
தேடிச் செல்லும்.

வான்மதிதாசன்

# மட்டு. அம்பாறை மாவட்டங்களில் அரச அலுவலகங்களுக்கு மூடுவிழா

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்இயங்கி வரும் வர்த்தக திணைக்களத்தின் அலுவலகங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மூடப்படவுள்ளன. இதனால் பலர் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1989-ம் ஆண்டில் நெல் சந்தைப் படுத்தும் திணைக்களம் மூடப்பட்டதை தொடர்ந்தே இங்கு வர்த்தக திணைக்களம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப் பகுதி வைத்திய சாலைகளுக்கு தேவையான உணவுப் பொருட்கள் இத்திணைக்களத்தால் வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இதே வேளை மட்டக்களப்பில் இயங்கிவரும் மோட்டார் -போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகமும் ஜனவரி மாதம் முதல் மூடப்பட இருக்கிறது. ஏற்கனவே கமநல சேவைகள் ஆணையாளர் அலுவலகமும் மூடப்பட்டு விட்டமை தெரிந்ததே.

எனினும் மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இவ்வாறு அரச அலுவலகங்கள் படிப்படியாக மூடப்படுகின்றமைக்கான காரணங்கள்என்ன என்பது குறித்த தெளிவான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

# பாப்பரசர் வரவேற்புக்கு விரிவானஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)
ஜனவரி மாதத்தில், கொழும்புக்கு வருகை தரவுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை வரவேற்பதற்கு விரிவான முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அரச மரியாதைகளுடன் பாப்பரசர் வரவேற்கப்படவுள்ளார். பாப்பரசரைக் கௌரவிக்கும் முகமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மரியாதை அணிவகுப்பும் நடைபெற இருக்கிறது. விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதி மாளிகை வரை மோட்டார் பவனியாக அவர் அழைத்து வரப்படவுள்ளார்.

காமினி கொலை தொடர்பாக

# ஒபேசேகரபுர வீட்டில் பொலிசார் தீவிர சோதனை

(கொழும்பு)
காமினி திசாநாயக்கா கொலைப்பட்ட பாலத்துறை குண்டுவெடிப்பை நிகழ்த்தியவர் எனக் கருதப்படும் தற்கொலையாளிப் பெண்ணின் பெயர், எதிர்பாராத விதமாக கைதுசெய்யப்பட்டுள்ள பெண் ஒருவரினால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறு பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது விசாரணையை திசை திருப்பும் ஒரு முயற்சியாகவும் இருக்கலாமென பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

தற்கொலையாளியின் பெயரை வெளியிட்ட குறிப்பிட்ட பெண், தற்கொலையாளி அடிக்கடி கொழும்பில் திரிந்தவராகவும், வட மாகாணத்தைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை ஒபேசேகரபுர வீட்டின் அறைகளிலும், தளபாடங்களிலும், மேசைகளிலும், இலாச்சிகளிலும் இருந்து பெறப்பட்ட விரலடையாளங்களுக்கும் தற்கொலைப் பெண்ணின் விரலடையாளங்களுக்கும் இடையில் சம்பந்த முண்டா என்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பன்னிரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



லெப் , சங்கர் - சுரேஸ்
(செல்வச்சந்திரன் சத்தியநாதன்)

தாயின் மடியில் 19.06.1961 மண்ணின் மடியில் 27.11.1982

வீரத் தமிழன்னை வெற்றியைத்தவிர இம்மண்ணில் வேறொன்றும் வேண்டாது என்றுறுதி கொண்டு திடமுடன் போராட்டத் தீபத்தை மூட்டி விட்டு தமிழீழ மண்ணின் தலைமா வீரனாய் ... எங்களது தலைவனின் மடியில் விழிமூடிச் சரித்திரத்தின் தனியான நாயகனாய் நின்ற சத்தியநாதா! - உன் வழிதேடி அன்னையும்... பேரனும்...ஐந்தாண்டின் பின் வந்தனரே ... அறியாயோ ? ... விழிதிறந்து பாரடா! ஒரு கணம்!

''தாயகம்''
கம்பர்மலை,
வல்வெட்டித் துறை.

-குடும்பத்தினர்
(10210)

## அந்தியேட்டி அழைப்பிதழ்



செல்லக்கண்டு 'தங்கமுத்து

தோற்றம் 4-6-1901 மறைவு 3-10-1994

28-11-94 திங்கட்கிழமை காலை எமது பெரிய தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் தொண்டமானாறு காட்டுப்புல இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் பின்பு காலை 10.00 மணிக்கு நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்களைகேட்டுக் கொள்கின்றோம். மேலும் 3.10.94ல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ச. இரத்தினவேல், ச. பழனிவேல்
குடும்பத்தினர்
(பெறாமக்கள்)

பருத்தித்துறை வீதி
தொண்டமானாறு;

(10198)

## 11-ம் ஆண்டு நீங்காத நினைவு

தோற்றம் 25 - 12 - 1939



மறைவு 27 - 11 - 1983

நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(சற்கோட்டை புதிய ஏற்பாடு கிறீஸ்த்து சபை ஸ்தாபகரும் அதன் உக்கிரணகாரரும்)

நீதிமான் மடிந்து போகிறான் ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை. புத்திமான்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் ஆனாலும் தீங்கு வராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை - ஏசாயா - 57 - 1

சற்கோட்டை,
அல்வாய் வடக்கு

- குடும்பத்தினர்

(9859)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# 1995 -ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில், 01.01.1995 ம் திகதி தொடக்கம் 31.12.1995 ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 09.12.1994 ம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 07.12.1994 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''செயலாளர், நகராட்சி மன்றம் பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத்தபால் உறையின்இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும், அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும்.இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்;


### அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச்சந்தை | ரூபா. 68255/- | ரூ.1500/- | ரூ:150/- |
| 2. மீன் சந்தை | ரூபா. 13750/- | ரூ.1500/- | ரூ.150/- |
| 3 வான் வண்டிக் காலை | ரூபா. 7150/- | ரூ 1500/- | ரூ.150/- |
| 4. மிதிவண்டி பாதுகாப்பு நிலையம் | ரூபா. 4400/- | ரூ 500/- | ரூ.100/- |
| 5. மாட்டிறைச்சிக் கடை | ரூபா.114400/- | ரூ.1500/- | ரூ 150/- |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 10000/- | ரூ 1500/- | ரூ 150/- |

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை,

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
23-11-1994. (சி-10780)

## 8-ம் ஆண்டு 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சூட்டி
கனகசபை கிருபாகரன்
(கிருபா)

தாய் மடியில்
16. 09. 1967
தாயக மண்ணில்
17. 06. 1986



தேசப்பற்றாளன்
கனகசபை சுதாகரன்
(சுதா)

தாயக மடியில்
09. 01. 1970
அண்ணனின் வழியில்
27. 11- 1989

மானமற வேங்கை மதிநுட்ப போரலையில்
கொப்பேக்கடுவவும்கூலிப்பட்டாளங்களும்
ஆனையிறவிலிருந்து இயக்கச்சி நோக்கி வர
பாதை வழிமறித்துப் போர்புரிந்த வீரனே
தின அரக்கர் படை திசை கெட்டுப் போவதற்கு
தானம் உயிர் கொடுத்த தயாளன்- கிருபா

இந்தியன் வந்து இருண்ட எம் தேசம்
சந்திகள் தோறும் சாவு மலிந்தது
அண்ணனுக்கு ஒளியேற்ற விரைந்திட்ட வேளை
அல்லிப்பளையில் இந்திய இராணுவமும் துரோகிகளும்
தீனச்செயலால் உனைக் கவர்ந்து செல்வதற்கு
தானம் உயிர் கொடுத்த தனயன்- சுதா

கண்ணிலே மலர்ந்த மலரெடுத்து உங்களது
கால்களில் சொரிந்து அர்ச்சித்து நிற்கின்றோம்
தேவர் உலகில் நின்று நீங்களும் தோழர்களும்
தமிழீழம் மலர மலர்மாரி சொரிந்து வாழ்த்திடுவீர்.

'உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எமதுள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும்'

தந்தை, தாய், சகோதரன்,
உறவினர், நண்பர்கள்.

சூட்டிவீதி,
மாசார்,பளை. (10141)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் 1995-ம் ஆண்டுக்கான

# ஆதனவரி அறிவித்தல்

ஆதன மீள் மதிப்புக்கமைவாக,இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதன வரித் தொகைகளே 1995-ம் ஆண்டுக்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தப்படற்பாலதென வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாதன வரித்தொகைகள் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செப்ரெம்பர் மாதம் 30, டிசம்பர் மாதம் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம், 1995-ம் ஆண்டு சனவரி மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதன வரியையும் செலுத்தினால் 10 வீத வரிக்கழிவும், காலாண்டுக்குரிய ஆதன வரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 5 வீத வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதன வரித் தொகைகளுக்கு பற்றாணை செலவு அறவிடப்படும் இப்பற்றாணைச் செலவு வெற்றுக் காணிகளுக்கும், குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15 வீதமாகவும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமாகவும் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட வரிமதிப்புக்கு எதிர் சொல்லுதல் ஏதுமிருப்பின் அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப் பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால், குடியிருப்போரின் பொருட்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதைக் குடியிருப்போர் கவனிக்க வேண்டும். வாடகைக்காரர்கள் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி, அத்தொகையை வாடகையில் குறைத்துக் கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
21-11-1994. (சி:10781)

எம் விடிவுக்காய் தங்கள் இன்னுயிரை ஈந்த மாவீரர் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த அஞ்சலியை செலுத்துகின்றோம். உங்கள் இலட்சியம் நிறைவுற உங்கள் காலடி தொடர்வோம்.

மயிலிட்டி கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்பு சங்கம்
(10048)

## 31ம் நாள் நினைவஞ்சலி

கணபதிப்பிள்ளை
சபாபதிப்பிள்ளை
(சந்திரா ஜுவலர்ஸ் உரிமையாளர், செங்கலடி)

தோற்றம் 11-01-1913 மறைவு 28-10-1994

காலனவன் உனைத்தொடர பலதிங்கள் என்றிருக்க காலமில்லை உனக்கென்று தன்பாசமதை வீசிட்டான் எம் பாசமதை நாம் உனக்கு காட்டிட பொழுதிலையே ஏனையா போய்விட்டாய் வெகுசீக்கிரமாய் எமைவிட்டு மறுபிறவி எம்மிடையே நீயெடுப்பாய் என்றெண்ணி முகமது நிழலாட தேறுகின்றோம் நாமெல்லாம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புற்றளை வளவு,
புலோலி தெற்கு,
புலோலி.
(9858)

### சிந்தனைக்கு

எந்த இலட்சியத்திற்காக உயிர் துறக்கப்படுகின்றதோ, அதுவே ஒருவரைத் தியாகியாகச் செய்யும். வெறும் மரணம் மட்டும் ஒருவரைத் தியாகியாக்கிவிடாது.

-நெப்போலியன் போனபாட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-11-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தமிழ் இனத்தின் காவலர்கள்

இன்று மாவீரர் நாள். தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம்முயிரை ஈகம் செய்த மறவர்களை தமிழீழ மக்கள் போற்றி நினைவு கூரும் நாள். இதுவரையில் தமிழீழ விடுதலைப் போரில் சுமார்7000க்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். இவ் வீரமறவர்களை நினைவு கூரும் இம் மாவீரர் நாள் தமிழீழ மக்களின் வாழ்வுடன் பிணைந்து விட்ட எழுச்சிகர நாளாகும்.

தமிழீழத்தின் இன்றைய வீர வரலாறு இம்மாவீரர்களின் இரத்தத்துடனும், சதையுடனும் கலந்து போயுள்ளது. இவர்கள் மற்றவர்கள் கற்பனைக்கு எட்டாத விதத்திலும், மற்றவர்கள் ஆச்சரியத்தில் வியக்கும் வண்ணமும் தமது ஆற்றல், செயற்பாடு, மனோதிடம், அர்ப்பணிப்பு என்பனவற்றை வெளிக்காட்டியவர்கள். இவர்கள் தமிழீழமென்னும் உயர்ந்த இலட்சியத்திற்காக தம்முயிரைத் தற்கொடை செய்தவர்கள்.

இம்மாவீரர்களின் வீரவரலாறுகள் இன்று உலகிலுள்ள ஒடுக்கப்படும் இனங்களுக்கு ஒரு முன்னுதாரணமாகும். ஒடுக்கப்படும் இனங்கள் தமது விடுதலைக்கு எத்தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதே இம்மாவீரர்கள் போதித்துச் சென்றுள்ள பாடமாகும். இதற்காக இவர்கள் தமது இளமைக் காலத்தையும், அதன் சுகங்களையும் மட்டும் தியாகம் செய்யவில்லை பெரும் துன்பங்களையும், சுமைகளையும் எதிர்கொள்ளவும் சுமக்கவும்வேண்டியும் இருந்தது.

இம்மாவீரர்களின் மனோ உறுதியும், அர்ப்பணிப்பும் சிங்கள ஏகாதிபத்தியத்தை மட்டும் அச்சம் கொள்ள வைக்கவில்லை. இந்தியவல்லாதிக்க சக்தியையே ஆட்டம் காண வைத்ததெனலாம். தனது 'கொல்லைப்புறம்' என்ற எண்ணத்துடன் தமிழர் தாயகத்திற்குள் புகுந்த இந்திய இராணுவத்திற்கு இது மாற்றான் 'வளவு' என்பதை தமது மனோதிடத்தின் மூலம் புரிய வைத்தவர்கள் இம் மாவீரர்கள். இந்திய வல்லாதிக்க சக்தியின் தெற்குப்புற எல்லையை நிர்ணயம் செய்தவர்கள்.

சிறிலங்கா அரசியலைப் பொறுத்து இன்று புதியதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதுவரை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் ஒரே வழி என்ற சிறிலங்கா அரசின் நிலைப்பாடு மாற்றம் கண்டுள்ளது. அரசியற்தீர்வு பற்றிப் பேசப்படுகின்றது. இப்புதிய சூழ்நிலை இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வைக் கொண்டு வருமா? மாட்டாதா? என்பது வேறு விடயம். ஆனால், இப்புதிய அரசியற் சூழ்நிலையை உருவாக்கியவர்கள் இம் மாவீரர்களே என்பதில் கேள்விக்கே இடமில்லை.


எழுபதுகளின் பிற்பகுதியில் போர் என்றால் போர் என்று கர்ச்சித்த சிங்களப் பேரினவாதிகள் இன்று இராணுவத்தீர்வு குறித்து உரத்துப் பேச முடியாது உள்ளனர். இக்கூச்சலில் சிங்கள மக்கள் சலிப்படைந்து விட்டனர். ஏனெனில், போரின் விளைவு எதுவாக இருக்கும் என்பதை மாவீரர்கள் தெளிவாகவே அவர்களுக்குப் புகட்டியுள்ளனர்.

இதேபோன்றே எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து சுமார் ஒரு தசாப்தத்திற்கு மேல் விடுதலைப்புலிகளை ஒடுக்கியே தீருவோம் என்று பேசிய இராணுவம் இன்று கிளாலிக் கடற்பரப்பை பறிகொடுத்து தன் போர்முறைத் திட்டத்தையே இழந்து போய் நிற்கின்றது எனலாம்.

அதாவது, அன்று தமிழ் மக்கள் சாத்வீக ரீதியில் தமது உரிமைகளைக் கோரிய போது அரச பயங்கரவாதத்தை அவிழ்த்து விட்ட சிறிலங்கா அரசாங்கம் இன்று இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு பற்றி பேசுகின்றது இது இலகுவில் நிறைவேறிய விடயமல்ல. இதற்காக பல ஆயிரக்கணக்கான விடுதலைப்புலிப் போராளிகள் தமது இன்னுயிர்களை ஈந்துள்ளார்கள் என்பதே உண்மையாகும்.

சிலர் புதிய அரசாங்கம் சமாதானத்தின் மீதுள்ள பற்றினால் புலிகளுடன் பேச்சுக்களுக்கு முன்வந்ததாக விளக்கம் கூற முற்படலாம். ஆனால் இவ்வாதம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. போரினால் கடந்தகாலத்தில் சிங்களத்தரப்பிற்கு ஏற்பட்ட இழப்பினை கணிப்பீடு செய்ததன் பின்னரே இந்த முடிவிற்கு புதிய அரசாங்கம் வந்துள்ளதெனலாம். அதாவதுபோரை வெல்ல முடியாது என்பதை சிங்கள அரசாங்கம் புரிந்து கொண்டதே காரணமாகும்.

இவ்வாறாகச் சிங்களப் பேரினவாத சிந்தனையையே மழுங்கடித்த இம்மாவீரர்கள் இனப் படுகொலைக்கும், ஆக்கிரமிப்பிற்கும் தடைக்கல்லாக எழுந்து நின்று எமது மண்ணையும், மக்களையும் காத்தவர்கள். ஆயினும் இம் மாவீரர்களின் சிந்தனை, இலட்சியம் இன்னமும் முற்று முழுதாக நிறைவேறவில்லை. அவர்கள் தம் உயிரை ஈகம் செய்து உச்சநிலைக்குக் கொண்டு வந்து விட்ட விடுதலைப் போராட்டம் முழுமையான வெற்றி பெற இன்னும் சில தூரம் செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையில் மாவீரர்களை நினைவு கூரும் இன்றைய நாளில் அவர்களின் பணியைத் தொடர்வோமென உறுதி கொள்வதே அவர்களுக்குத் தமிழ் மக்கள் ஆற்றும் அஞ்சலியாக இருக்கும்.




கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தின் முகப்புத் தோற்றத்தை முதலாவது படத்திலும், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தின் ஒரு பகுதியினை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## தேசியத் தலைவரின் பணிப்பின்பேரில் நான்கு முஸ்லிம்கள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட நான்கு முஸ்லிம் பொதுமக்கள் தமிழீழ தேசியத் தலைவரின் பணிப்பின்படி நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை 10மணிக்கு விடத்தல்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து மன்னார் மாவட்டத் தளபதி க. சிலனால், முசலி உதவி அரசாங்க அதிபரிடம் முஸ்லிம் பொதுமக்கள் கையளிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் பின்னர் மன்னார் அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இக் கையளிப்பு நிகழ்வில் மன்னார் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சின்னப்பா மாஸ்ரர், நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விடுதலை செய்யப்பட்ட முஸ்லிம் பொதுமக்களின் விபரம் வருமாறு, இலவங்குளம் புத்தளத்தைச் சேர்ந்த முகம்மது அலிபா முகம்மது நசீர் (வயது 16), முகம்மது செய்ராது (வயது 20), முகம்மது அலிபா ஜக்கர் (வயது 26,) முகம்மது ஹனிபா முத்தலி (வயது 27) ஆகியோராவர்.

## மட்டு. தடுப்பு முகாம்களுக்கு "சோசா" ஆணைக்குழு விஜயம்

நீதிமன்ற விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக ''சோசா'' ஆணைக்குழு எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு தடுப்பு முகாம்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

விசாரணையின்றி மட்டக்களப்பு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 26 கைதிகள் அண்மையில் தம்மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி உண்ணாவிரதம் அனுஷ்டித்து வந்தனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு தடுப்பு முகாம்களிலும் மகசின், வெலிக்கடைச் சிறைச்சாலைகளிலும் நீதிமன்ற விசாரணைகளின்றி தடுப்பு முகாம்களில் உள்ளவர்களை தனித்தனியாக சந்தித்து விசாரணை செய்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யக்கூடிய ஆதாரம் இல்லாதவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

## வந்தாறுமூலையில் கைதான 150 பேருக்கும் என்ன நடந்தது?

(மட்டக்களப்பு)

1990-ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் வந்தாறுமூலைப் பல்கலைக்கழக வளாகத்தில் அகதிகளாக தங்கி இருந்த போது சீருடை அணிந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட 150 க்கும் அதிகமானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு விரைவாகத் தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு பகிரங்கமான கோரிக்கை ஒன்று விடப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்படுகையில் 1990 செப்டம்பர் 5-ம் திகதியன்று 150 பேர் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் இருந்தும் காணாமற் போயுள்ளனர். பத்தாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் அந்தச் சமயத்தில் அங்கு தங்கி இருந்துள்ளனர் இவர்களில் சுமார் 150 பேர் சீருடையில் வந்த ஆயுதபாணிகளால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர் நான்கு வருடங்கள் கடந்த பின்னரும் கூட இவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரையில் விளக்கப்படவில்லை காணாமல்போனவர்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு இவர்கள் பற்றியும் விசாரணை நடத்தி இவர்களது நிலைமை பற்றி அறியத்தர வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

### யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி

## சிறிகாந்தாவின் பெயர் ஜனாதிபதிக்கு சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம் ஜனாதிபதியின் கவனத்திற்கு சுகாதார அமைச்சினால் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனம் தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற நேர்முகத்தேர்வினை அடுத்து சுகாதார அமைச்சும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சும் டாக்டர் சிறிகாந்தாவின் பெயரை சிபார்சு செய்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கவனத்திற்கு கொடுத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நியமனம் தொடர்பான நேர்முக தேர்வுக்குயாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட இந்த நேர்முகத் தேர்வின் மூலம் தற்போது தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியாக பணியாற்றிவரும் டாக்டர் சிறிகாந்தா தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

## பழுதடைந்த மின்மானி வட கிழக்கு அனுப்ப முடிவு

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தினால் வாங்கப்பட்டு காலத்திற்கொவ்வாதவையென கைவிடப்பட்ட மின்சார மீட்டர்களை வடக்கு-கிழக்கு பகுதிக்கு அனுப்பிவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவை 1978ஆம் ஆண்டில் சோவியத்திலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டவையென்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் மின்சாரசபைக்கு கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களமே மின்சார மீட்டர்கள் வழங்கி வந்தது. இவை பொருத்தமற்றவை என கண்ட மின்சாரசபை வேறுவகையான மீட்டர்களை இறக்குமதி செய்து வீடுகளுக்கு பொருத்திவருகிறது.

சுமார் 27,300 மின்சார மீட்டர்கள் இவ்விதம் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. வடக்கு-கிழக்கிற்கு மீள மின்சாரம் அனுப்பப்பட்டால் இங்கு இவற்றை அனுப்பி வைக்கவே அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மாணவரமைப்பினரால் நேற்று மாலை வெளியிடப்படவிருந்த சுவடுகள், இதயநாதம், எங்கள் தாய்த்திருநாடு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக குடாக்கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலுக்கு கடந்த ஓரிரு தினங்களாக மீனவர்கள் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓரிரு தினங்கள் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதால் மீனவக்குடும்பங்கள்வறுமைநிலைக்குத்தள்ளப் பட்டுள்ளன (21)

## நாளை மறுதினம் விளையாட்டரங்கு

ஞாயிற்றுக்கிழமையில்வெளிவரும் விளையாட்டு அரங்கு இன்று வெளிவரவில்லை. பதிலாக இவ் அரங்கும் மாணவர் அரங்கின் ஆண்டு 13க்குரிய பொருளியல் - 2 பயிற்சி வினாத்தாளும் நாளை மறுதினம் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

## மரணம்தான்உயிரோட்டம்!

வாழ்வின் அஸ்தமனம்!
அவனியில் மானிடரின் மரணம்
மரணத்தின் பிடியில் சிக்காதிருக்க
மானிடர் செய்யும் ஜாலங்கள் ஏராளம்
மரணம் விலகிச் செல்ல - அதை
நாடிச் செல்வோரும் இங்குளர்.
யார் இவர்கள்!
அவனியே வியந்து நிற்கும்
கரும்புலிகள் தான் அவர்கள்
மரணம் தான் இவர்களின்
உயிரோட்டம்!
புதிய புலிகளைக் கருத்தரிக்கும்
தாய் வயிறு
இது எட்ட நிற் போர்க்கு
புரியாத புதிர்
கிட்ட வந்தால் புதிர்விலகும்
புது வரலாறு பிறக்கும்.

பள்ளிக்குப் போகும் சின்னப்பிஞ்சை
வாஞ்சையுடன் அள்ளி வருடுவர்
எள்ளி நகையாடும் உற்றதோழனை
நட்புடன் விழித்து பதிலிறுப்பர்
கொள்ளிகூட வேண்டாம் என்று
காற்றிடை கலந்தே போவர்
கரும்புலிகள்!
உறுதியின் உச்சங்கள்
அவனியே வியந்து நோக்கும்
உருக்கிரும்பு பெட்டகங்கள்
தியாகத்தின் உச்சியை - இனி
எவரும் தாண்ட முடியாதென
அகிலம் முழுதும் அறை கூவல் விடுத்தவர்கள்
வெடிமருந்து ஊர்தியில் ஏறி - எதிரி
பாசறை நோக்கி நகரும் போதும்
சக்கை மருந்து நிரப்பிய
வெள்ளலை மோதும் படகினில் நின்று
கடல்மடியை நோக்கி
விடை பகரும் போதும்
உற்றதோழரையும்,
பாசம் மிக்க தளபதியையும் விழித்து
இறுதிமொழி இயம்பும் போதும் - எம்
கண்காணாத தொலைவில்
காவியம் படைக்க - இலக்கை
நெருங்கும் போதும்
இவர்கள் நினைத்தது
தங்கத் தலைவனையும் தாய்மண்ணையுமே!

- கி. நிரேஸ்

## இமைப்பொழுதேனும் மறக்கமுடியாதோர்

கோலங்கள் போடுவதற்கு
புள்ளிகள் தான் ஆதாரம்
ஞாலமிதில் கட்டிடம் வானுயர
அத்திவாரங்களே ஆதாரம்.
ஆல் விருட்சம் வளர்வதற்கோ
சிறு வித்துக்கள் ஆதாரம்.

காலை விடிந்தொரு தாயகம் பிறக்க
மாவீரர்களே மூலாதாரம்.

கோலத்தின் அழகை லயிப்போர்
கட்டிடத்தின் ரம்மியத்தில் மகிழ்வோர்
விருட்சத்தின் நிழலில் இளைப்பாறுவோர்
ஆதாரத்தின் அருமையை எண்ணுவதில்லை.

எனினும் தாயக மண்ணும் மக்களும்
மாவீரர்களை ஒருபோதும் மறப்பதில்லை

மூச்சுக்கு உதவும் காற்றாக
பார்வைக்கு புலனாகாமல்
பேச்சின் ஒலியைப் போல்
உணர்வுகளைத் தொற்று வைக்கும்
வீச்சாக மிளிர்ந்து வரும் மாவீரரே!
உங்கள் நினைவுகளை
இமைப்பொழுதேனும்
மறந்திடுதல் தகுமோ?

- இளையவன் -

சாரிசாரியாக லாயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்து மக்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் உள்ள கல்லறைகளுக்கும், நினைவுக் கற்களுக்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மௌனமாக மாவீரர்களை ஞாபகம் செய்த பலர் மெல்லியதாக விசும்பியதையும் அவதானிக்க முடிந்தது.

## போராட்டத்தின் வளர்ச்சி

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

# எமது இலட்சிய உறுதியுடன் மோதியவர்கள் இன்று தோல்வியை சந்தித்து நிற்கின்றனர்

நீண்ட காலமாக எமது இலட்சிய உறுதியுடன் மோதியவர்கள் இன்று தோல்வியைச் சந்தித்து நிற்கின்றனர். சிங்களப் பேரினவாத அரசியலும் இன்று ஆட்டம் கண்டு நிற்கிறது. உறுதியான ஒரு போராட்ட சக்தியை எத்தகைய பலத்தாலும் வெற்றிகொள்ள முடியாது என்பதை இன்று சிங்கள தேசம் உணரத் தொடங்கியுள்ளது. இந்த விழிப்புணர்வால் தென்னிலங்கையில் பெரியதொரு அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. புதிய ஆணையுடன், புதிய அணுகுமுறையுடன், புதிய அரசு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது.

சந்திரிகா அரசு சமாதானக் கரத்தை நீட்டியபொழுது, நட்புறவுடன் நாம் அதைப் பற்றிக்கொண்டோம். நிபந்தனைகள் எதையும் விதிக்காமல், நிர்ப்பந்தங்கள் போடாமல் நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினோம். முதற் கட்டமாகத் தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது நாம் எமது மக்களின் நலன்களுக்கே முதன்மை கொடுத்தோம்.

# பூதாகாரமாக வளர்ந்துள்ள அன்றாட பிரச்சினைகள் முதற்படியாகத் தீர்க்கப்பட வேண்டும்

முடிவில்லாமல் தொடர்ந்த அரச வன்முறை எமது தேசத்தின் முகத்தை சிதைத்துவிட்டது. சாவும் அழிவும், எண்ணில்லா இன்னல்களும், குடிபெயர்ந்த அகதி வாழ்வுமாக எமது மக்களின் அன்றாட சீவியம் பெரும் அவலமாக மாறியது. சாதாரண வாழ்வின் சாதாரண தேவைகள்கூட எமது மக்களுக்கு மறுக்கப்பட்டது இயல்பான வாழ்விற்கு ஏதுவான எல்லாவற்றிற்குமே தடைகள் விதிக்கப்பட்டன. இதனால் எமது மக்களின் அன்றாட வாழ்க்கை ஒரு ஜீவ மரணப் போராட்டமாக மாறியது.

பூதாகாரமாக வளர்ந்துநிற்கும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் முதற்படியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதை பேச்சுக்களின்போது நாம் வலியுறுத்தினோம். சிங்களப் பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக இழைத்து வந்த கொடுமைகளுக்கு புதிய அரசு முதலில் பரிகாரம் காணவேண்டும். தேசிய இனப்பிரச்சனையின் அடிப்படைகளை ஆராய்வதற்கு முன்னராக எமது மக்களின் ஜீவாதாரப் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். சமாதான சூழ்நிலையை உருவாக்கி, தமிழர் மீதான தடைகளை நீக்கி, பொருளாதார வாழ்வைச் சீரமைத்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

# சமாதான வழியில் தீர்வு காண்பதை இராணுவம் விரும்புவதாக தெரியவில்லை

இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கு சந்திரிகா அரசு இன்னும் உருப்படியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கிவிடவோ, போக்குவரத்துப் பாதையை திறந்துவிடவோ அரசாங்கம் தயாராக இல்லை. இது ஒருபுறமிருக்க, இராணுவம் போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துகிறது. யுத்த தயாரிப்பு வேலைகளைத் தீவிரமாகச் செய்து வருகிறது. நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. சமாதானம் பற்றி பேசிக்கொண்ட பொழுதும் இராணுவத்தின் கரங்களைப் பலப்படுத்துவதிலேயே சந்திரிகா அரசு அக்கறை காட்டி வருகிறது.

தமிழர் பிரச்சனைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காண்பதை சிங்கள இராணுவம் விரும்புவதாகத் தெரியவில்லை. இராணுவத்தின் விட்டுக்கொடாத கடும் போக்கும், போர் நடவடிக்கைகளும், யுத்த தயாரிப்பு வேலைகளும் இந்த உண்மையையே எடுத்துக்காட்டுகிறது. சந்திரிகா அரசும் இராணுவ அணுகுமுறையை கைவிட்டதாகத் தெரியவில்லை. இராணுவத்தின் இறுக்கமான நிலைப்பாட்டிற்கு மாறாக செயற்படுவதையும் அரசு விரும்பவில்லை. இராணுவத்திற்கு எவ்வித அழுத்தம் போடுவதற்கும் தயாராக இல்லை. இப்படியான ஒரு நிலைமையில், சமாதான சூழ்நிலையோ இயல்பு நிலையோ ஏற்படுவது இலகுவான காரியமல்ல.

# அரசாங்கம் வேறு, ஆயுதப்படை வேறு என பாகுபடுத்திப் பார்ப்பது தவறாகும்

இன்றைய நிலைமையில், சகல ஆட்சி அதிகாரங்களும் சந்திரிகா அரசிடம் கைமாறியிருக்கும் சூழ்நிலையில், அரசு வேறு, ஆயுதப் படைகள் வேறு என்றோ, அல்லது அரசின் நிலைப்பாடு வேறு, ஆயுதப்படைகளின் போக்கு வேறு என்றோ, பாகுபடுத்திப் பார்ப்பது தவறு. ஆயுதப்படைகள் அரசின் ஒரு அங்கம். அரசின் நிலைப்பாட்டையே ஆயுதப் படைகள் பிரதிபலிக்கிறது என்றே நாம் கருதவேண்டும். எனவே, அரசுக்கு சமாதானப் பாதையில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமானால் ஆயுதப் படைகளையும் அந்த வழிக்கு இட்டுச் செல்வது சிரமமாக இருக்க முடியாது.

போர் நடவடிக்கைகளை நிறுத்துவதும், பொருளாதாரத் தடைகளை நீக்குவதும், போக்குவரத்துப் பாதையை திறப்பதும், கடல் வலயத் தடையை நீக்குவதும், அகதிகளை மீளக் குடியமர்த்துவதும் எல்லாமே ஆயுதப்படையினரின் நிலைப்பாட்டில் தங்கியிருக்கிறது. ஆயுதப்படையினர் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தால், அரசும் அதற்கு உடந்தையாக இருந்தால், எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கு பேச்சுமூலம் தீர்வு ஏற்படுவது சாத்தியமில்லை. எமது மக்கள் இன்று எதிர்கொண்டு நிற்கும் சாதாரண பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியாது போனால், மிகவும் சிக்கலான அடிப்படைப் பிரச்சனைகளை அரசினால் தீர்த்துவைக்க முடியுமா என்பது சந்தேகத்திற்கு இடமானதே.

# பேச்சுக்கள் மீண்டும் தொடருமானால் பங்குபற்றத் தயாராகவே உள்ளோம்

நாம் சமாதானத்தின் பாதைக்கு இடையூறாக நிற்கவில்லை. நாம் சமாதானத்தின் கதவுகளைச் சாத்திவிடவும் இல்லை. நாம் சமாதானப் பேச்சுகளுக்கு தயாராகவே இருக்கிறோம். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருமானால் நாம் அதில் பங்குகொள்வோம்.

எமது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சனைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். எமது மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவதானால் சந்திரிகா அரசு, முதற்கட்டமாக எமது மக்களின் அவசரப் பிரச்சனைகளுக்கு தீர்வுகண்டு, தமிழர் தாயகத்தில் சமாதான சூழலையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்கவேண்டும்.

# தன்னாட்சிக் கட்டமைப்புக்களை நிறுவும் உயர்ந்த நிலையில் போராட்டம் உள்ளது

தமிழரின் தேசிய போராட்டம் நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலான நீண்ட, சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலைகளால் உருவாக்கம் பெற்று பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. இன்று அதன் பரிமாணம் வேறு. வடிவம் வேறு நீண்ட காலமாக, இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம், இன்று தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புகளை நிறுவும் அளவிற்கு போராட்டத்தை உயர்ந்த படிநிலைக்கு எடுத்துச்சென்றிருக்கிறது. இன்று நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். இந்த வலுவான அத்திவாரத்தை இட்டுத்தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் ஒரு பலமான சக்தியாக, வலுவான தளத்தில் நிற்பதால்தான் சிங்கள அரசு எம்முடன் பேச்சுக்களை நடத்த விரும்புகிறது.

சமாதான வழியில், தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாண சந்திரிகா அரசு முயற்சிகளை எடுக்குமானால் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசிய போராட்டத்தினது இன்றைய வளர்ச்சிக் கட்டத்தை கருத்திற்கொண்டு உருப்படியான சுயாட்சி தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்படுமானால் நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

# நாம் சலுகைக்காக கையேந்தும் கூட்டமல்ல

எனது அன்பார்ந்த தமிழ் மக்களே,

நாம் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் தேசம். நாம் சலுகைகளுக்காக கைநீட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல. எத்தனையோ ஆண்டுகளாக, எத்தனையோ அழிவுகளைச் சந்தித்து, எத்ததனையோ உயிர்களைப் பலிகொடுத்து, எத்தனையோ தியாகங்களைப்புரிந்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, நாம் எமது போராட்டத்தை எமது இலட்சியப்பாதையில் முன்நகர்த்திவருகிறோம். நாம் சிந்திய இரத்தமும் கண்ணீரும் வீண்போகவில்லை. இன்று எமது போராட்டம் தன்னாட்சியை நோக்கி வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டுவருகிறது. ஒரு தொடர்ச்சியான, உறுதியான போராட்டம் மூலமே நாம் இந்தக் கட்டத்தை எட்டிவிட முடிந்தது.

எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்தத் தேசிய அபிலாசையை நிறைவுசெய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டிநிற்கிறோம். அந்தத் தீர்வே, நிரந்தரத் தீர்வாக அமையும். அந்தத் தீர்வே, நிரந்தரமான சமாதானத்தையும் தோற்றுவிக்கும். அந்தத் தீர்வு எமக்கு கிட்டும்வரை, நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒன்றுதிரண்ட தேசமாக, தளராத உறுதியுடன் இருக்கவேண்டும்.

இன்றைய தேசிய நாளில், எமது தேசத்தின் விடுதலைக்காக மரணித்த எமது மாவீரர்களை நாம் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இந்தப் புனித நாளில், நாம் எமது குறிக்கோளை உறுதியாகப் பற்றிக்கொள்வோமென உறுதிமொழி செய்வோம்.

சுதந்திரத்தின் ஆலயங்களான துயிலும் இல்லங்களில், ஈகத்தின் சுடரொளிகளை நாம் ஏற்றிவைக்கும் பொழுது, அந்த அற்புதமானவர்களின் ஆன்ம அபிலாசைக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக, இந்த உறுதிமொழியை நாம் செய்துகொள்வோமாக.

## பாண்ட் குழுக்கள் அவசர ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கீழ்வரும் பாடசாலைகளின் பாண்ட் இசைக்குழு மாணவர்களுக்கான அவசர ஒன்றுகூடல்கள் இன்று நடைபெறவுள்ளன. இவ் ஒன்றுகூடலில் பாடசாலை பாண்ட் அணிகளின் பொறுப்பாசிரியர்கள், மற்றும் அணியிலுள்ள மாணவர்கள் சீருடையுடனும் தவறாது அவ்வப் பாடசாலைகளுக்கு வருகைதருமாறு அதிபர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாண்ட் இசைக்குழு மாணவர்களுக்கான அவசர ஒன்றுகூடல் காலை 9-00 மணிக்கும்,

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாண்ட் இசைக்குழு மாணவர்களுக்கான அவசர ஒன்றுகூடல் காலை 11-00 மணிக்கும்,

★ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பாண்ட் இசைக்குழு மாணவர்களுக்கான அவசர ஒன்றுகூடல் காலை 10-00 மணிக்கும், அவ்வப்பாடசாலைகளில் நடைபெறும்.

---

யாழ்.

தமிழீழ காவற்துறை, மாணவர் அமைப்பு என்பன கலந்துகொள்ளவுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஈகச்சுடரேற்றப்பட்டு தேசியக்கொடி ஏற்றப்பட்டு, அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதனையடுத்து மௌன வணக்கம் செலுத்தப்பட்டு சிறப்புரைகள் இடம்பெறும். சிறப்புரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இன்று மாலை நடைபெறவுள்ள மாபெரும் பொதுக் கூட்டத்திற்கென பெரிய அளவில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்ட மைதானமும் அதனைச் சூழவுள்ள இடங்களும் சிறப்புற அலங்கரிக்கப்பட்டுள்ளன.

---

நள்ளிரவில்

மக்களும், வீதிகளில் சென்று கொண்டிருந்த மக்களும் மேற்படி மணியோசை கேட்டவுடன் அந்த இடத்திலேயே நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

வீதிகளில் சென்று கொண்டிருந்த வாகனங்களும் மேற்குறிப்பிட்ட நேரம் வந்ததும் அங்கங்கே தரித்து நின்று அதில் சென்று கொண்டிருந்தோர் வாகனங்களை விட்டு இறங்கி மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வை அடுத்து மாவீரர் நிகழ்வாக நினைவுச் சுடரேற்றும் நிகழ்வு நடைபெற்றது. தமிழீழத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் முக்கிய சுடரேற்றும் வைபவங்கள் இடம்பெற்றன.

ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அனைத்து மாவீரர்களின் கல்லறைகளிலும் நினைவுக்கற்களிலும் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது. பெற்றோர்களும் போராளிகளும் இந்த நினைவுச் சுடர்களை ஏற்றிவைத்தனர்.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரச-தனியார் காரியாலயங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மகளிர் மன்றங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள் உட்பட ஏனைய காரியாலயங்கள் அனைத்திலும் மாவீரர் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

அத்துடன் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும், வீட்டு வாயில்களிலும், வீதிகளிலும் மாவீரர் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டில் யாழ். செயலகம், மாநகரசபை அலுவலகம், கல்வித்திணைக்களம் பல்கலைக்கழகம், தபால் அலுவலகங்கள் உட்பட அனைத்து அரச காரியாலங்களிலும் இச் சுடர் ஏற்றப்பட்டிருந்தது.




திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நாள் வளைவை மேலுள்ள படத்தில் காணலாம்.

---

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள்

சுழிபுரம் குடியிருப்பு ஓடையம்பதி வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் தேவஸ்தான ஸ்தாபகரும், பொன்னாலை வரதராஜப் பெருமாள்தேவஸ்தானம், சுருவில் ஐயனார் கோவில் ஆகியவற்றின் பிரதம குருவுமான சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் நடராஜக் குருக்கள் 1994-11-26 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோகாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமாஸ்கந்தக் குருக்கள், இராமகிருஷ்ணசர்மா (ஜேர்மனி), பத்மநாப சர்மா (ஓய்வுபெற்ற மலேரியாப் பகுதி வெளிக்கள உத்தியோகத்தர்), பிரகதீஸ்வரன், வத்சலா, வித்யா, வடிவாம்பிகை, வாலாம்பிகை, சபேசன் (சுவிஸ்), யோகாநந்தக் குருக்கள் (பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராஜேஸ்வரி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி, விமலா, கலாவதி (ஆசிரிய ஆலோசகர்) சோமாஸ்கந்தக் குருக்கள் (அவுஸ்திரேலியா), சத்யோஜாதசர்மா (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் கொழும்பு மாநகரசபை), சபாரத்தின சர்மா (சிவன்கோவில், சித்தன்கேணி), ஸ்ரீதரசர்மா (சக்தி நூல்நிலையம் மட்டக்களப்பு), மைதிலி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1994-11-27 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

ந. பத்மநாபசர்மா

ந. யோகாநந்தக் குருக்கள்.

136, கிராம அபிவிருத்தி திட்டம்
(பாற்பண்ணை அருகாமை)
திருநெல்வேலி (10213)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
04-01-1953

உதிர்வு:
29-10-1994

### திருமதி செல்வநாயகி சிவசுந்தரம்

நீலத்தை வெட்கவைக்கும் நித்திலமாய்
நீயொளிர்ந்துன்
கோலத்தால் எம்மைக் குளிர்வித்தாய்-ஞாலத்தில்
கள்ளங் கபடில்லா கற்கண்டு மொழியின்றி
வெள்ளம் பொழியுதே விழி-

கடந்த 29-10-94இல் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (ஞாயிறு) 27-11-94இல் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புள்ள

கணவர் நா. சிவசுந்தரமும்,
(அலங்கார பந்தல் அமைப்பாளர்)
பிள்ளைகளும்.

சோமசுந்தரம் வீதி,
(கணேஸ் வீதி,)
ஆனைக்கோட்டை- (10212)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.